# அருள் ஒளி

– 07



பிலி/நுகேகொடை தமிழ் மகா வித்தியாலயம்

நுகேகொடை

## இந்து மன்றம் – 2015

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# CROWN ENGINEERING (PVT) LTD
# (SPRING COURT)

## Our Ongoing Project (Luxury Apartment)





**21 Units - No.05, Castle Lane, Bampalapitiya**
**24 Units - No.12, De Seram Road, Mount Lavinia**

**Contact No :**
**0777666276**
**0777680430**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமதிப்புமிக்க வில்வப் பிரம்மம்

# அருள் ஒளி

வை. இ. எல். காந்தன் குருக்கள் ஐயா அவர்கட்கு, இப் பாடசாலையின் அதிபராகிய என்னால் அன்பும் பண்பும் நிறைந்த சிறிய அன்பளிப்பு.

## வாணி விழாச்சிறப்பு மலர் இதழ் - 7

## 2015


**Mrs. Jeyarani Thiyagarajah**
**B. A., PGDip.in Edu., M.Ed., S.L.P.S.**
**Principal**
**WP/Pili/Nugegoda Tamil Maha Vidyalaya**
**Nugegoda.**
21/10/2015
T. P. No. 0714483861




**ஐந்து கரத்தனை யானைமுகத்தனை**
**இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை**
**நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினைப்**
**புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.**





## இந்து மன்றம்

## பிலி / நுகேகொடை தமிழ் மகா வித்தியாலயம்

## நுகேகொடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

நுகேகொடை தமிழ் மகா வித்தியாலயமே
மலர் அரும்பாலுனை நறும்பா கொண்டு
மனதால் உனைத் துதித்தோம்
கலைத்தாயே // தருவாயே
கலைபலவே // புகழுறவே
வாழ்த்தி வணங்கித் துதித்துத் தினமும்
போற்றுவோம், போற்றுவோம் (நுகே)

ஓடி ஆடி மகிழ்ந்து உடலுறுதி காணலாமே நாம்
கூடிஆடி ஒன்றாய் ஒரு குடும்பமாகலாமே
அறிவியலும் கலைபலவும் மொழியாவும் கற்றிடுவோம் (நுகே)

அன்னை தந்தை அன்புத் தெய்வம்
ஆசிரியர் ஒளியே பள்ளிக்கூடம்
கோயில் போல பேதம் என்பதில்லையே
இங்கு சேர்ந்து நாமும் கற்கும் கல்வி
நாட்டைக்காக்க, திருநாட்டைக்காக்க
தாய் நாட்டைக் காக்க (நுகே)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுகேகொடை தமிழ் மகா வித்தியாலயம்

## இலக்கு

- தமிழ் கலாசார விழுமியங்களை, பின்பற்றி எதிர்கால சவால்களை எதிர்க்கொண்டு வாழக்கூடிய சிறந்த சமநிலை, ஆளுமை, உள்ள சமூகப் பொறுப்புள்ள மாணவர்களை உருவாக்குதல்.

## நோக்கு

- மாணவர்களின் திறமைகளை விருத்தி செய்து அதனூடாக எமது இலக்கை அடைவதற்கான பங்களிப்பைச் செய்யத்தூண்டுதல்.

- பெற்றோர்களினதும் மாணவர்களினதும் எதிர்பார்புக்களை அடைய முயற்சிப்பதுடன் மாணவர்களினது தலைமைத்துவப்பண்பை அபிவிருத்தி செய்து அவர்களைத் தற்கால, சாதகமான சமூக சூழலுக்கேற்ப ஒற்றுமையுடன் வாழப்பழக்குதல்.

- கல்வி மற்றும் ஒழுக்க விழுமியங்களில் பயனுறுதி மிக்க வளர்ச்சியை அடைதல்.


- எமது சகல வளங்களையும் திறமையாகவும், பயன்பாடு மிக்கதாகவும் முகாமைத்துவம் செய்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அதிபர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்த அமுலாக்கல் திட்டத்தின் அடிப்படை குறிக்கோள்

# 3P

P – PERSONAL

P - PRACTICE

P- PROFESSIONAL

மாணவருக்கு நாளாந்த வகுப்பறை கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினூடாக **தனியாள் கவனிப்பு (P) வேலை உலகிற்கு வழிகாட்டல் (P) எதிர்கால வாழ்க்கைக்குரிய பயிற்சியும் (P)** பாடசாலையின் பௌதிக மற்றும் மானிட வளங்களினூடாக வழங்கப்படுவது வருடாந்த திட்டத்தினூடாக நடைமுறைப்படுத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலி / நுகேகொடை தமிழ் மகா வித்தியாலயம்

# இந்து மன்ற செயற்குழு அங்கத்தவர்கள் - 2015

| | | |
|---|---|---|
| பெருந்தலைவர் | - | திருமதி. ஜெ. தியாகராஜா |
| பொறுப்பாசிரியர் | - | திருமதி. க. முரளீதரன் |
| | | செல்வி. ய. ஆலாலசுந்தரம் |
| | | திருமதி. கி. செல்வராணி |
| | | திருமதி. இ. றாஜினி |
| தலைவர் | - | செல்வி. சி. திவ்யா |
| உப தலைவர் | - | செல்வி. தி. பிரியதர்சினி |
| செயலாளர் | - | செல்வி. க. நிசாந்தினி |
| உப செயலாளர் | - | செல்வி. ர. விராஜினி |
| பொருளாளர் | - | செல்வி. தி. இந்துமதி |
| உப பொருளாளர் | - | செல்வி தி. நிரோசினி |
| இதழாசிரியர்கள் | - | செல்வி தி. தேவபாரதி |
| | - | செல்வி ம. உதயதர்சினி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலராக்கக் குழு

| | | |
|---|---|---|
| பெருந்தலைவர் | - | திருமதி. ஜெ. தியாகராஜா |
| பொறுப்பாசிரியர்கள் | - | திருமதி. க. முரளீதரன் |
| | | செல்வி. ய. ஆலாலசுந்தரம் |
| | | திருமதி. கி. செல்வராணி |
| | | திருமதி. இ. றாஜினி |
| இதழாசிரியர்கள் | - | செல்வி தி தேவபாரதி |
| | - | செல்வி ம உதயதர்சினி |
| தலைவர் | - | செல்வி. சி. திவ்யா |
| செயலாளர் | - | செல்வி. க. நிசாந்தனி |
| பொருளாளர் | - | செல்வி. தி. இந்துமதி |
| கணனி வடிவமைப்பாளர் | - | யோ. பாலகுமார்(ஆசிரியர்) |
| | | ம. உதயதர்சினி (மாணவி) |
| | | க. நிறோஜினி (மாணவி) |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமியின் ஆசிச் செய்தி......

நுகேகொடை தமிழ் மகாவித்தியாலய மாணவர்களால் வருடந்தோறும் வெளியிடப்படும் சஞ்சிகையான "அருள் ஒளி" இம்முறையும் வெளிவர இருப்பதை அறிந்த மகிழ்வடைகிறேன். இச் சஞ்சிகை சிறந்த முறையில் வெளிவர இறை அருளை வேண்டுவதோடு என் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

ஒருமுகப்படுத்தும் ஆற்றால் வளரவளர அதிக அளவில் அறிவைப் பெறலாம். ஏன் என்றால் இந்த வழிதான் அறிவைப் பெறுவதற்கு உரிய ஒரே வழி. பணம், சேர்பதோ, கடவுள் வழிபாடோ அல்லது வேறு எந்த ஒரு வேலையோ ஆனாலும் மனத்தை ஒருமுகப்படுத்தும் ஆற்றல் வளரவளர மேலும் சிறப்பாக அந்தக் காரியத்தைச் செய்து முடிக்கலாம் என்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்.

அந்த வகையில் இவ்வாறான சஞ்சிகைகள் வெளியிடுதல், மற்றும் நாடத்தாப்படும் விழாக்கள் மாணவர்களின் சிந்தனை ஆற்றலைத் தூண்ட உதவுவதோடு, மன ஒருமைப்பாட்டை வளர்க்கவும் உதவுகின்றன.

மாணவர்கள் தாம் கற்றவற்றை தமது வாழ்க்கையில் கடைப்பிடித்து சிறந்த முறையில் வாழ வாழ்த்துகிறேன்.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் திரியுமூர்த்திகளின் அருள் கிடைக்க வேண்டுகிறேன்.

சுவாமி சர்வரூபானந்த
தலைவர்
இராமகிருஷ்ணா சாரதா மிஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

அன்பே சிவம் அதுவே நலம்

அன்னை தந்தை ஆசான் அருட்தெய்வம்

என்நாளும் நெஞ்சகத்தே என்றும்

**வை. இ. எஸ். காந்தன் குருக்கள்**

(கண்மணிதாசன் – ஏநூராள்)

# பிரதம விருந்தினார் வாழ்த்துச் செய்தி...

கொழும்பு மாநகரின் நுகேகொட மண்ணில் எழுந்து நிற்கும் கல்விக் கலங்கரை விளக்கம். கல்வி உலக மாந்தர்களுக்கெல்லாம் ஒரு கண். அறிவு அனைத்தையும் ஆழும். அறியாமை அனைத்திலும் வீழும். இதனை மனத்தில் கொண்டு கவிஞர் நீலாவணன் சொன்னார் "ஆழுமையன்றி அறியாமைக்கு கீழ்படிந்து அடங்கப்படாதது அறிவு" இதுதான் அறிவின் உண்மை. இத்தகைய அறிவின் பயனைப்பெறுவதற்கு நமது முன்னோர்கள் தாங்கள் வாழும் இடங்களில் இரண்டு ஆலயங்களை பலப்படுத்தி பயன்பெற்றார்கள் ஒன்று இறையாலயம் அடுத்தது மறையாலயம். அந்த வழியில் கொழும்பு மாநகரின் நுகேகொட மண்ணில் இத்தகைய வழியில் எழுந்ததுதான் **நுகேகொட தமிழ் மகா வித்தியாலயம்** இவ் வித்தியாலயத்தில் வாணி விழாவினை சிறப்பிக்குமுகமாக அம்மலருக்கு ஒரு ஆசி உரை அனுப்புவதில் பெரு மகிழ்வு அடைகின்றேன். இவ் வித்தியாலயத்தின் சிறப்பு மிகு அதிபராக விளங்குகின்ற திருமதி.ஜெயராணி தியாகராஜா அவர்கள் எத்தனையோ சுமைகளுக்கு மத்தியில் கல்விச் சுமைதாங்கி அறிவைச்சுகமாக்கியவர். அன்னை மகாசக்தியாகிய முப்பெரும் தேவியின் திருவருளும் அனைத்து இறையருளும் இப் பாடசாலைக்கும், அதிபர் அவர்களுக்கும், கல்விப் பயனளிக்கும் ஆசிரியர் ஆசிரியைகளுக்கும், மாணவ மாணவிகளுக்கும் இப் பாடசாலை அபிவிருத்திக் குழுவுக்கும், பெற்றோர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் எல்லா வளமும் கிடைக்க அருள் மிகு அன்னை சக்தியின் திருவடியை வணங்கி பிராத்திக்கின்றேன்.

**விஸ்வப் பிரம்மம் வை. இ. எஸ். காந்தன் குருக்கள்**

**ஸ்ரீ காளிபுரம், பெரியபோரதீவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலியந்தலை வலைய தமிழ்மொழிமூல உதவிக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி........

பிலி / நுகேகொடை தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆண்டாண்டுதோறும் வாணிவிழா சிறப்பு மலராக வெளிவரும் "அருள் ஒளி" இம் முறையும் ஏழாவது இதழாக ஒளி வீசுவதையிட்டு அகமகிழ்கின்றேன்.

மாணவர்களின் விழுமிய சிந்தனைகளை வளர்க்கும் முகமாக கல்விக்கூடங்களில் வாணிவிழா நடைபெறுவது முக்கியமானதாகும் இன்று காணப்படும் மாணவ சமூகம் நாளைய சமுதாயத்தை கட்டியெழுப்பும் தூண்கள். ஆகவே இம் மாணவர்களின் சுய ஆக்கங்களை தாங்கி வரும் "அருள் ஒளி" அவர்களின் எண்ணத்துளிகளின் சின்னமாகத் திகழ்வது வரவேற்கத்தக்கதாகும். இம்மலரானது தொடர்ந்தும் ஒவ்வொரு வருடமும் வெளிவர எனது வாழ்த்துக்களைக் கூறுவதில் பேருவகையடைகிறேன்.

**I.A காதர்**<br>
**உதவிக்கல்விப் பணிப்பாளர்**<br>
**(தமிழ் மொழிமூலம்)**<br>
**பிலியந்தலை கல்வி வலையம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாலய முதல்வரின் வாழ்த்துச்செய்தி

**வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு**
**வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் - வெள்ளை**
**அரியாசனத்தில் அரசரோடென்னைச்**
**சரியாசனம் வைத்த தாய்.**

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்பது ஔவை வாக்கு. மானிடப் பிறவியே இறைவனை நினைத்து வழிபடச் சிறந்த பிறவியாகும். இந்த வகையில் மனிதனை மனிதனாக வாழ வைப்பது சமயமாகும். எனவே சிறு வயது தொடக்கம் ஆன்மீக சிந்தனைகளையும் வாழ்க்கை முறைகளையும் புகட்டுவது தலையாய கடனாகும். இத்தகைய பணியில் பாடசாலையினது பங்களிப்பு பிரதானமானது ஆகும்.

இதனடிப்படையில் எமது பாடசாலை இந்துமன்றமானது தனித்துவமாக விளங்குகின்றது. அன்னை பராசக்தியை முப்பெரும் தேவியராய் வழிபடும் காலம் நவராத்திரி காலமாகும். இக்காலத்திலே கலைகளின் நாயகியாகிய கலைவாணிக்கு காணிக்கையாக்கும் கலை விழாவில் இந்து மன்றத்தின் முயற்சியால் ஏழாவது இதழாக அருள் ஒளி ஒளிர்வதையிட்டு அதற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் வித்தியாலயத்தின் முதல்வர் என்ற வகையில் பேருவகையும், மனநிறைவும் அடைகின்றேன். இவ்விதழானது ஆண்டு தோறும் பல்வேறு வளர்ச்சிகளுடன் ஒளிவீச வேண்டும் என வாழ்த்துவதோடு இச்சஞ்சிகை வெளியீடு சிறப்புற நிகழவும் எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துச் கொள்ளுகின்றேன்.

இச் சஞ்சிகையை நெறிப் படுத்திய இந்துமன்றப் பொறுப்பாசிரியர்களுக்கும், மலராக்கக் குழு மாணவர்களுக்கும் பாராட்டுகளை தெரிவிப்பதோடு அம்பிகையின் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிட்டவேண்டும் என அம்பிகையின் பாதங்களைப் பணிநது நிற்கின்றேன்.

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**

**திருமதி. ஜெயராணி தியாகராஜா**
**(B.A,P.G Dip in education,M.Ed,S.L.P.S)**
**அதிபர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Vice Principal

It is with great pleasure I contribute my message to the souvenir "Arul Oli"published to mark the annual vaani vizha organized by the Hindu society of Nugegoda Tamil Maha Vidyalaya.

The Hindu society of our school Started  years back and has grown from strength to strength with range of activities in volving the students participate in Hindu religious activities which will inspire and enable them to be involved them in their adulthood and in their lives that lies before them.

The society successfully organized the annual inter class Competitions too

Thanks to the teachers in – charge, the committee members, the students for their enthusiastic efforts to make this event a success.

In the same spirit Hindu society has made every efforts to become the dynamic society and has taken every step to involve almost all the Hindu students in these activities which will hold them in good stead as responsible citizens of mother Lanka and  to peace, prosperity and harmony for the entire nation.

I wish to express my heartful thanks and appreciation to our distinguished guest  for gracing this occasion and  our principal Mrs.Jeyarani Thiyagarajah,  teachers, parents, students and the Hindu society of Nugegoda Tamil M.V for their kind support extended to make this event a success.

All the best

**Ms.G.F.P. Majeed**
**Vice Principal**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

பிலி / நுகேகொடை தமிழ் மகா வித்தியாலத்தில் நவராத்திரி விழாவை முன்னிட்டு வெளிவரும் "அருள் ஒளி" சஞ்சிகைக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் கிறிஸ்தவ மன்றப்பொறுப்பாசிரியர் என்ற வகையில் ஆண்டவருக்கு முதற்கண் நன்றியைச்சமர்ப்பிக்கின்றேன்.

மாணவர்களின் இச் செயற்பாட்டை பாரட்டுவதுடன் இப் பாடசாலையின் செயற்பாடுகளுக்கு ஆண்டவர். இயேசு கிறிஸ்து ஆசி வழங்க வாழ்த்துகின்றேன்.

திருமதி. வத்சலா பிரதீஸ்
கிறிஸ்தவ மன்றப் பொறுப்பாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

நுகேகொடை தமிழ் மகா வித்தியாலயத்தின் வாணிவிழா நிகழ்வுகளை ஒட்டி வெளியிடப்படும் அருள் ஒளி சஞ்சிகைக்கு இஸ்லாம் மன்றப் பொறுப்பாசிரியை என்ற வகையில் எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இன மத பேதமின்றி இன ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்ற இப்பாடசாலையில் நுகேகொடை நகரைச் சூழவுள்ள பகுதிகளில் இருக்கும் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மாணவர்களின் கல்வித் தேவைகள் பூர்த்திசெய்யபட்டு வருகின்றன. இங்கு மாணவர்களிடத்தில் கலை, கலாச்சார, சமய, பண்பாட்டு விழுமியங்களை வளர்தெடுப்பதில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மன்றங்கள் திறம்பட இயங்கி வருகின்றன.

இந்த வகையில் இந்து மன்றச் செயற்குழுவினரது வாணிவிழா நிகழ்வும் அருள் ஒளி சஞ்சிகை வெளியீடும் நடைபெறும் இன்றைய தினத்தில் இம்மன்றத்தின் பணிகள் மேலும் சிறப்படைந்து மாணவர்களின் கல்வி மற்றும் ஒழுக்க விழுமியங்கள் மென்மேலும் உயர்வு பெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எம். எஸ். எஸ் சுஹைறா**
**இஸ்லாம் மன்றப் பொறுப்பாசிரியை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாசிரியர்களின் மனதில் இருந்து.......

**"ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்**

**ஏய உணர்விக்கும் என்னம்மை- தூய**

**உருப்பளிங்கு போல்வாளென்னுள்ளத்தினுள்ளே**

**இருப்பளிங்கு வாராதிடர்."**

கலைகளின் நாயகியான கலை வாணிக்கு காணிக்கையாக்கும் கலை விழாவிலே இவ்வாண்டும் ஏழாவது இதழாக "அருள் ஒளி" ஒளி வீசுவதைக்கண்டு மனம் பேருவகை அடைகின்றது.

இச்சஞ்சிகை வெளிவர ஆலோசனை வழங்கிய அதிபர் திருமதி. ஜெயராணி தியாகராஜா அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் அத்தோடு இச்சஞ்சிகை சிறப்பாக வெளிவர உதவிய அனைத்து ஆசிரியர்களுககும் நன்றியைத் தெரிவிப்பதோடு, மாணவரின் திறமைகளுக்கு களமமைத்துக் கொடுக்கும் இவ் "அருள் ஒளியானது" ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு உயர்ச்சிகளோடு ஒளிவீச வேண்டும் என எல்லாம் வல்ல விநாயகரின் பாதம் பணிந்து வேண்டுகின்றோம்.

**பொறுப்பாசிரியர்கள்**

**திருமதி. க. முரளீதரன்**

**செல்வி. ய. ஆலாலசுந்தரம்**

**திருமதி. கி. செல்வராணி**

**திருமதி. இ. றாஜினி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மன்றத்தலைவரின் எண்ணத்திலிருந்து...

வருடாவருடம் வாணிவிழாவை முன்னிட்டு வெளிவரும் "அருள் ஒளி" இவ் வருடமும் அருள் மணத்தோடு உங்கள் கைகளில் தவழ்கின்றது. ஏழாவது இதழாக மிளிர ஆலோசனை தந்து ஆதரவும் ஊக்கமும் அளித்து அனுமதி தந்த எமது பாடசாலை அதிபர் மதிப்பிற்குரிய திருமதி.ஜெயராணி தியாகராஜ் அவர்களுக்கும் பொறுப்பாசிரியர்கள் அனைவருக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

இச்சஞ்சிகை சிறப்புற உருப்பெறுவதற்கு சகல விதத்திலும் உதவிய உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் இந்துமன்ற தலைவி என்ற முறையில் நன்றி கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலைமறை காயாக மாணவர்களிடையே காணப்படும் திறமைகளை வெளிக்கொண்டு வந்து ஆன்மீகசிந்தனைகளை வளர்பதில் தொடர்ந்தும் பணியாற்ற வேண்டும் என இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

நன்றி.

இந்து மன்ற தலைவர்
செல்வி.சி.திவ்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றச் செயலாளரது உள்ளத்தில் இருந்து......

**"என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்நன்றி கொன்ற மகற்கு"**

2015ம் ஆண்டிற்கான வாணிவிழாவை முன்னிட்டு எமது பாடசாலையில் இந்து மன்றத்தினால் வெளிவரும் "அருள் ஒளி" என்னும் இதழில் எமது பாடசாலை மாணவர்களின் இலை மறை காய் போல மறைந்திருக்கும் திறன்களை வெளிக்கொண்டு வந்திருக்கும் இவ் இதழை வெளியிட அனுமதி வழங்கிய எமது பாடசாலை அதிபருக்கும், இனிதே இந்த இதழை எந்த விதமான குறைகளும் இன்றி மனத்திருப்திக்கு அமைய நெறிப்படுத்த உதவிய எல்லாம் வல்ல இறைவனுக்கும் நன்றியை நவில்கின்றோம்.

மேலும் ஆக்கங்களை அள்ளித்தந்து இம் மலரைச் சிறப்புடன் வெளியிட உதவிய மாணவர்களுக்கும், மாணவர்களின் மறைமுக ஆற்றல்களை வெளிப்படுத்திய ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இம்மலரானது என்றும் பூத்துக்குலுங்கிட வேண்டும். என இந்து மன்றச் செயலாளர் என்னும் வகையில் இறைவனை பிராத்தித்துக்கொண்டு நன்றி கூறுவதில் மிக்க மகிழ்சியடைகின்றேன்.

**"இன்று நாம் செய்யும் நன்மையே நாளை நம் தலைமுறைக்கு இன்பமாய் அமையும்."**

நன்றி

செல்வி. க. நிசாந்தினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்களின் இதயத் துடிப்பு

ஒரு கணம்......

ஆதியும் அந்தமும் இல்லாத எமது இந்து சமயம் எனும் கருத்தோடு எமது பாடசாலை "அருள் ஒளி" எனும் சஞ்சிகையினை எல்லாம் வல்ல இறைவனின் அருள் ஆசியுடன் வெளிவர உள்ளது இச் சஞ்சிகை வெளிவர ஆலோனையும் வழிகாட்டலும் வழங்கிய எமது பாடசாலை அதிபர் திருமதி. ஜெயராணி தியாகராஜா அவர்களுக்கும், எம்முடன் இணைந்து காலதாமதங்களைப் பொருட்படுத்தாது ஒத்துழைப்பு வழங்கிய எமது இந்து மன்றப் பொறுப்பாசிரியரான திருமதி. M. கலைமகள் ஆசிரியருக்கும், இந்து மன்ற செயற்குழுவிற்கும் மேலும் ஏனைய ஆசிரியர்களுக்கும் இதழாசிரியர் என்ற முறையில் எனது நன்றியை நவில்கின்றேன்.

இந்நூலிலே எமது மாணவர்களின் ஆற்றல்களும், திறமைகளும் ஆக்கங்களாகவும், தொகுப்புக்களாகவும் ஒளி வீசிக் காணப்படுகின்றது. இவ் ஆக்கங்கள் மாணவர்களின் தேடல் முயற்சியினால் நேர்த்தியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ் அருள் ஒளியிலே பெருமளவு நிறைகள் காணப்படுவது போல ஒரு சில குறைகளும் காணப்படலாம். எமது சமய விழுமியங்களிலே மன்னிப்பு எனும் விழுமியமும் காணப்படுகின்றது. எனவே பெரியோர்கள் ஆகிய நீங்கள் அவற்றை மன்னித்து எங்களுடன் ஒன்றிணைந்து மேலும் முன்னேறிச் செல்ல தோள் கொடுப்பீர்கள் என நம்புகின்றோம்.

மேலும் இச் சஞ்சிகை வெளியீட்டிற்கு பல்வேறு வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் இதழாசிரியர் எனும் வகையில் நன்றி கூறுவதில் பெருமையடைகின்றோம்.

**"இருளை அகற்றி அருள் ஒளியுடன் வாழ்க"**


**இதழாசிரியர்கள்**

**செல்வி.ம.உதயதர்சினி**

**செல்வி.தி.தேவபாரதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மன்றம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பிரிவின்

# கன்னிப் பக்கங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப் பண்புகள்

எவரிடமும் இனிமையாகப் பேசுவோம்
எல்லோரிடமும் அன்பாகப் பழகுவோம்
எப்போதும் உண்மை பேசுவோம்

ஆக்கம்
ம.சச்சின்குமார்
தரம் - 1

# பூசைக்கு உரிய பொருட்கள்



பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய், பூ, பூமாலை

கற்பூரம், ஊதுபத்தி

ஆக்கம்
சி.தயானந்தன்
தரம் - 1

அருள் என்னும் வடிவம் உள்ள ஆண்டவனை அன்பகவே காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியைத் தொண்டு



இந்த உலகத்தைப் படைத்த சிவபெருமான் ஏன் எமக்கு கைகளை படைத்தார் என்று தெரியுமா? இறைவனுக்கு தொண்டுகள் செய்யவேயாகும் அந்தவகையில் எமது உடலை வருத்திச் செய்யும் தொண்டே சரியைத் தொண்டாகும்.

உதாரணமாகப் பார்ப்போமானால், கோயிலில் செய்யும் சில தொண்டுகளைக் குறிப்பிடலாம். அவையாவன, கோயிலை கூட்டுதல், கழுவுதல், கோயில் வீதியிலுள்ள புல் பூண்டுகளை அகற்றுதல், பூமாலைகட்டுதல், தோரணம் போடுதல் என்பன அவற்றுள் சிலவாகும்.

அந்த வகையில் திருநாவுக்கரசர் சரியைத் தொண்டு செய்து இறையடி சேர்ந்தவராவர். அவர் உழவுத் தொழில் செய்யும் உபகரணம் ஒன்றை வைத்துக்கொண்டே இருப்பார். அதனால் இவரை உழவாரப்படையாளி எனவும் அழைப்பர். ஆகவே எம்மால் முடிந்த சரியைத் தொண்டை செய்து இறைமுத்தி அடைவோம்.

கே. லக்சிகா

தரம் - 4

**பணி செய். பலனை எதிர்பாராதே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய்மை

நாம் தூய்மை பேணும் இடங்கள்

வீடு

கோயில்

பாடசாலை


**ஆக்கம்**

**தி. தில்ருக்ஷான்**

**தரம் - 1**

---

# தைப்பொங்கல்



தைமாதம் முதல் நாளில்

வீட்டை அலங்கரிப்போம்
கோலம் போடுவோம்
புதுப்பானையில் பொங்குவோம்
சூரியனுக்குப் படைப்போம்
உண்டு மகிழ்வோம்
உழவரை மதிப்போம்
உறவினருக்குக் கொடுப்போம்
**பொங்கலோ பொங்கல்**


ஆக்கம்

ஆர்த்தி

தரம் - 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார்



முதல் வணக்கத்துக்குரியவர் பிள்ளையார். நாம் எக்காரியததையும் தொடங்கு முன் பிள்ளையாரை வணங்கவேண்டும். பிள்ளையாருக்கு ஆறுகம்புல் மாலை இட்டு வழிபடவேண்டும். மோதகம், அவல், கடலை, பால், தேன், பழம் என்பவற்றைப்படைக்கலாம் பிள்ளையாரை வழிபடும்போது தலையில் மூன்று முறை குட்டியும், மூன்று முறை காதில் பிடித்து தோப்புக்கரணம் போட்டும் வழிபடவேண்டும்

ஆக்கம்
ச. இந்துஜா
தரம் - 2

தனிமையிலும் மௌனத்திலும் எவன் விறு விறுப்பான செயலைக் காண்கின்றானோ, எவன் சுறுசுறுப்பான செயலின் நடுவில் தனிமையாகவும் மௌனத்தையும் காண்கிறானோ, அவனே இலட்சிய மனிதன் அவன் தன்னடக்கத்தின் இரகசியத்தை அறிந்துள்ளான்.அவன் தன்னையே கட்டுப்படுத்தியுள்ளான்.

சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனம் பண்ணுவோம்



அம்மா, அப்பா எங்கள் கண்கண்ட தெய்வங்கள். அவர்கள் எம்மைப் பெற்று வளர்ப்பவர்கள்.
எம்மைப்பேணிக் காப்பவர்கள்.
எம்மைப் படிக்க வைப்பவர்கள்.
அவர்கள் சொற்கேட்டு நடப்போம்.
தினமும் அவர்களை வணங்குவோம்.

ஆக்கம்
ரூா.லக்ஷான்
தரம் - 2

**ஆசைகளை விடாமல் எவனொருவன் பற்றுகிறானோ**
**அவனை விட்டு துன்பங்கள் நீங்க மறுக்கிறது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் தொண்டுகள்

கோயிலில் தொண்டுகள் செய்வோம்.
கோயிலைக் கூட்டுவோம்.
மண்டபத்தைக் கழுவுவோம்.
பூமரங்களுக்கு நீர் ஊற்றுவோம்.
பூ பறிப்போம், மாலை கட்டுவோம்.
தோரணங் கட்டுவோம்.
மணி அடிப்போம்.
தோத்திரம் பாடுவோம்.

ஆக்கம்
தனுசிகா
தரம் - 2

---

# சிவ சின்னங்கள்

திருநீறு, திருவைந்தெழுத்து,
உருத்திராக்கம் முதலியன சிவ சின்னங்கள் ஆகும்.
சிவ சின்னங்களை நாமும் அணிவோம்.

ஆக்கம்
ஞா.சைலெஸ்கான்
தரம் - 2

**அருள் என்னும் வடிவம் உள்ள**

**ஆண்டவனை அன்பாகவே காணலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி பூஜை



கல்வித் தெய்வம் சரஸ்வதி, சரஸ்வதியை வாணி என்றும் அழைப்போம் சரஸ்வதிபூசை ஒன்பது நாட்கள் கொண்டாடப்படும். முதல் மூன்று நாட்கள் வீரத்தை வேண்டி துர்க்கைக்கும், அடுத்த மூன்று நாட்கள் செல்வத்தை வேண்டி இலக்குமிக்கும், இறுதி மூன்று நாட்கள் கல்வியை வேண்டி சரஸ்வதிக்கும் விழா எடுக்கப்படும். பத்தாவது நாள் விஜயதசமி நடைபெறும். அன்று ஏடு தொடக்கும் நிகழ்ச்சி நடைபெறும். நாமும் பாடசாலையிலும் வீட்டிலும் சரஸ்வதி பூசை கொண்டாடி மகிழ்வோம்.

ஆக்கம் :

ச. தினுசான்

தரம் - 1

**பிச்சை புகினும் கற்கை நன்றே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய கருமம்

நாம் இந்த உலகத்திலே பிறந்திருக்கின்றோம் சில காலங்களுக்காவது இவ்வுலகத்திலிருந்து நல் வாழ்வு வாழவே விரும்புகின்றோம். இதற்கெல்லாம் நமக்கு அருந் துணைபுரிபவர் கடவுளே. அவருடைய அருள் இல்லா விட்டால் ஒரு நொடிப் பொழுதேனும் நாம் வாழமுடியாது.

கடவுளுடைய அருளை நாம் பெறவேண்டுமானால் அவரிடத்து மிகுந்த பக்தியுடையவர்களாக இருக்க வேண்டும் தினம்தோறும் பல முறை அவரை நினைக்க வேண்டும் அப்படி நினைப்பதற்கு சில வழிகளை பெரியோர்கள் நியமித்து இருக்கிறார்கள் அவை நித்திய கருமம் என்று சொல்லப்படும்.

கோலானது குருடனுக்கு வழிகாட்டுவது போல் நித்திய கருமங்களே இவ்வுலகத்தில் இன்ப வாழ்க்கைக்கு மறு உலகத்தின் மோட்ச வாழ்க்கைக்கும் வழிகாட்டுவனவாக உள்ளன. அவற்றை தினந்தவறாது அனுட்டித்தல் சைவ மக்களின் கடமையாகும்.

சூரியன் உதிப்பதற்கு முன் நித்திரை விட்டெழுதல் வேண்டும். எழும்பும்போது சிவ சிவ என்று சொல்லிக் கடவுளைத் தியானித்தல் வேண்டும். பின்பு மலசல போசனஞ் செய்து கை, கால் கழுவிக் கொள்ளவேண்டும். பல் விளக்கி, முகம், கை, கால்களை சுத்தமாக கழுவித் திருநீறு பூசிக் கடவுளை வழிபட வேண்டும் ஸ்நானந் செய்யும் போது உடுத்திருந்த ஆடைகளைத் தோய்த்து உலரவிட வேண்டும் பின்பு நீராடி உடம்பைத் தூய்மையாக்கிக் கொள்ள வேண்டும் தோய்த்துலர்ந்த ஆடைகளை உடுத்து விபூதி தரித்துக்கொண்டு சிவபெருமானை வழிபட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடும் போது அன்றலர்ந்த புதுப் பூக்களை கொய்து இறைவனின் திருவடிகளுக்கு சூட்டியும் தூப தீபங்காட்டியும் வணங்குதல் நன்று. தீட்சை பெற்றவர்கள் சந்தியாவந்தனஞ்செய்தல் வேண்டும். அதன்பின்கோயிலுக்குப் போய் வருதல் சிறந்த கருமமாகும்.

உணவு உண்ணத்தொடங்குமுன் சிவபெருமானைத்தியானித்து அவருக்கு எம்மை அர்ப்பணித்தல் வேண்டும். உண்ணும் உணவில் ஒரு பகுதியைகாகம் முதலிய பிராணிகளுக்கு இடுதல் வேண்டும். உண்ணும் போது தேவையற்ற வார்த்தைகளைப்பேசாது சிவபெருமானையே மனதில் நினைத்தல் வேண்டும்.

வீட்டைவிட்டு வெளியே போகும் போதெல்லாம் விபூதி தரித்தல் வேண்டும். விபூதி தரிக்கும் நேரமெல்லாம் சிவபெருமானைத் தியானித்தல் வேண்டும். வழியிலே கோயில்களைக் கண்டால் கும்பிடுதல் வேண்டும். கோயில் மணிச்சத்தம் கேட்கும் போதெல்லாம் அப்பக்கம் நோக்கி கடவுளைத் தியானித்தல் வேண்டும். வேலைகள் முடிந்தபின் கடவுளைத்தியானித்தல் வேண்டும் வேலைகள் முடிந்தபின் ஓய்வான நேரங்களில் தேவாரதிருவாசகங்களை ஓதுதலும், மெய்யடியார்கள் சரித்திரங்களைப் படித்தலும், நன்று. நித்திரைக்குப் போகும்முன் விபூதி பூசுதல் வேண்டும்.

இப்படியாகச்செய்து வருவோமானால் சிவ உணர்வு எமது உள்ளத்திற் பெருகும். அதனால் நாம் பிறவி எடுத்த பயனை அடையலாம்.

"ஓம் நமச்சிவாய"

**ஆக்கம்**
**தி.தினுசன்**
**தரம் - 4**

**சில சமயங்களில் அறிவு நமக்கு வழிகாட்டுவதில்லை அப்போது நமது நம்பிக்கையே வழிகாட்டுகிறது. ஆகவே நம்பிக்கை அறிவிற்கு அப்பாற்பட்டது அறிவு நம்மைக் கைவிடும் பொழுது நம்பிக்கை நமக்கு உதவுகிறது. மகாத்மா காந்தி.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விரதங்கள்



மனிதர் தம் வாழ்வை நெறிப்படுத்தி ஆன்மீகத் துறையில் முன்னேற உதவும் சாதனங்களில் விரதமும் ஒன்றாகும். உபவாசம், நோன்பு என்பன விரதத்துடன் தொடர்புடைய சொற்களாகும்.

விரதம் எனும் சொல் உண்ணும் உணவைச் சுருக்குதல் அல்லது விடுத்தல் என்பதை குறிக்கின்றது. விரதத்தை அனுட்டித்தலின் நோக்கம் மனவடக்கத்தை மேம்படுத்தல் ஆகும்.

விரதங்களில் பல வகையுண்டு அவற்றுள் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

| | | |
|---|---|---|
| சிவ விரதங்கள் | : | மகா சிவராத்திரி, திருவாதிரை, பிரதோசம். |
| விநாயகர் விரதங்கள் | : | விநாயக சதுர்த்தி, விநாயக சட்டி. |
| முருகன் விரதங்கள் | : | கந்த சட்டி, திருக்கார்த்திகை. |
| சக்தி விரதங்கள் | : | நவராத்திரி, வரலட்சுமி, ஆடிச்செவ்வாய், கௌரி விரதம், ஆனி உத்தரம். |
| வைரவர் விரதங்கள் | : | சித்திரைப்பரணி, ஐப்பசிப்பரணி |
| கடமை விரதங்கள் | : | ஆடிஅமாவாசை, சித்திரைப்பௌர்ணமி |

**P.பர்மினா**


**தரம் - 5**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய குரவர்களுள் சம்பந்தர்

(வாணி விழா கட்டுரை போட்டியில் 1ம் பரிசு பெற்றது)



நாம் இன்று சைவசமயிகளாக திகழக் காரணமாக இருந்தவர்கள் நால்வர். இவர்களை சைவசமய குரவர் என்கின்றோம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் சுந்தரர், மாணிக்கவாசகர் இவர்கள் நால்வரும் சைவ சமய குரவர் ஆவார் சிவபெருமான் திருவருளினால் இந் நான்கு நாயன்மார்களும் சைவசமய வளர்ச்சிக்கு அரும்பெரும் தொண்டாற்றினர். இவர்களுள் ஞானசம்பந்தர் பற்றிச் சற்று விரிவாக ஆராய்வோம் .

திருஞானசம்பந்தர் சோழவள நாட்டிலே சீர்காழி என்னும் ஊரிலே பிறந்தார். இவர் தந்தையார் பெயர் சிவபாதவிருதயர் தாயார் பெயர் பகவதி அம்மையாராவார். இவர் மூன்று வயதிலேயே உமாதேவியாரிடம் ஞானப்பால் உண்டார். அதனால் இவர் திருஞானசம்பந்தர் என்று அழைக்கப்பட்டார். இவர் ஞானப்பால் உண்டமையினால் "தோடுடைய செவியன்" என்னும் தேவாரப்பதிகத்தை பாடினார்.

சிவபெருமான், குழந்தையான ஞானசம்பந்தருக்கு, பொற்றாளம், முத்துக்குடை, முத்துச்சிவிகை எனபவற்றை கொடுத்தருளினார். திருஞானசம்பந்தர் சிவபெருமானின் அருளினால் பல அற்புதங்களைச் செய்தார். முயலகன் என்னும் நோயை நீக்கியமை, பாண்டியனின் வெப்புநோயை நீக்கியமை, பாம்பு தீண்டிய வணிகனை உயிர்ப்பித்தமை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்காசு பெற்று பஞ்சம் போக்கியமை, திருமறைக்காட்டிலே திருக்கதவு மூடப்பாடியமை, பூம்பாவையை உயிர் பெறச் செய்தமை முதலியனவாகும். இவர் பாடிய தேவாரங்கள், முதல் மூன்று திருமுறைகளுள் அடங்கும். இவருக்கு ஆளுடைய பிள்ளையார், முத்தமிழ் விரகர், எனும் பல பெயர்கள் உண்டு. இவர் பதினாறாவது வயதிலே தனது திருமண நாளன்று "காதலாகி கசிந்து கண்ணீர மல்கி" எனத்தொடங்கும் தோவாரப்பதிகத்தை இறுதியாகப்பாடி, வைகாசி மூல நட்சத்திரத்தில் இறையடி சேர்ந்தார்.

**யோ. பிரவிசான்**
**தரம் - 5**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வினை தீவினை

சிவபெருமான் எல்லா உயிர்களுக்கும் தந்தை ஆவார். எனவே எல்லா உயிரினங்களும் எமக்கு சகோதர சகோதரிகளாவர். அச் சகோதர சகோதரிகளை நாம் என்றும் நேசித்து, அன்புசெய்து, துன்பம் செய்யாது, வாழ்தல் வேண்டும்.

ஆனால், நாம் எமது சகோதரர்களைப் போன்ற, ஏனைய உயிரினங்களுக்கும் ஏனைய உறவுகளுக்கும் தீமை செய்கின்றோம். வருத்துகின்றோம். கொலை செய்கின்றோம், வார்த்தைகளால் ஏனையோர் மனதைப் புண்படுத்துகிறோம். இவை எல்லாம் எமது ஆசை, அறியாமை, கோபம், பொறாமை, செருக்கு, அநீதி என்பவற்றால் ஏற்படுபவையாகும்.

இவற்றை நாம் வினைகள் என்கின்றோம் வினைகள் இரு வகைப்படும். அவையாவன, நல்வினை, தீவினை எனப்படும். மேற்கூறிய செயல்கள் எல்லையைக் கடக்கும் போது, நாம் செய்வது தீவினையாகும் இது உலக இன்பத்தைக் கெடுத்து, ஆன்ம நலத்தைக் கெடுக்கும் செயல்களாகும்.

தீவினை செய்தோர் இப் பிறவியிலும் மறு பிறவியிலும் துன்பத்தை அடைவார்கள். குருடர், செவிடர், முடவர், வறியவர், அறிவீனர் நோயால் வருந்துவோர், முதலிய இவர்களை முற்பிறப்பில் தீமை செய்தவர்களாக கருதுகின்றோம்.

அதனால் நாம் தீய செயல்களை செய்யாதவாறு நடத்தல் வேண்டும். இளமையில் இதனை கடைப்பிடித்தல் மிகவும் எளிது. நேர்மை, சத்தியம், அடக்கம், மன உறுதி, மனத்திருப்தி ஆகிய நற்பண்புகளை நாள்தோறும் கைக்கொண்டு ஒழுகுதல் வேண்டும். பெற்றோருக்கு கிழப்படிதல் நீதி நுல்களைக் கற்றல், அடியார் சரித்திரங்களை வாசித்தல், ஆசிரியர் குரு ஆகியோருக்கு பணிந்து நடத்தல், பிற உயிர்கள் மீது கருணை காட்டுதல், ஏனையோர் மீது இரக்கம் காட்டுதல், என்பன நற்பண்புகளாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவத்தை அடக்கி நற்செயல்கள் புரிதல் நன்மையாகும். நல்வினை செய்பவர்கள் இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தை அடைவர். நாம் செய்யும் நன்மைகள் நமக்கு நன்மையே செய்யும், நாம் செய்யும் தீய செயல்கள் எமக்கு பல துன்பங்களைக் கொடுக்கும்.

இதனால் நாம் மனம், மொழி, மெய் மூன்றினாலும் கடவுள் வழிபாடு செய்தல், ஏழைகளுக்கு இரங்குதல், பிறர் பிழை பொறுத்தல், இன்சொல் பேசுதல், நற்போதனை புரிதல் போன்ற நல்லதை செய்ய வேண்டும்.

இதனால் ஆணவம் வலிமை குன்றும், உண்மை அறிவு உண்டாகும், இறைவன் அருள் கிடைக்கும், ஆதலினால் தீவினைகளை ஒழித்து நல்வினைகள் செய்து வாழ்வோமாக.

**ஆக்கம்**
**சி. டில்சினி**
**தரம் - 3**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இடைநிலைப் பிரிவினரின்

# இயல்பான ஊக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியை வழிபாடு

நமது சமயத்தின் படி கடவுளை அடைவதற்கு நான்கு வழிகள் உண்டு. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும். இவை நாற்பாதங்கள் எனவும் நாற்படிகளெனவும், சிவ புண்ணியங்களெனவும் வழங்கப்படும். இவைகளுள் சரியையாவது சிவ பெருமானுக்கும், சிவாலயங்களுக்கும், சிவனடியாருக்கும் தொண்டு செய்தலாகும். ஒருவர் சரியைத் தொண்டுகளுள் ஒன்றையேனும் தொடர்ந்து செய்தல் வேண்டும்.

பிரதான சரியைத் தொண்டுகள் திருக்கோயில்களைக்கூட்டுதல், மெழுகுதல், கழுவுதல், பூந்தோட்டம் வைத்தல், பூ எடுத்துக் கொடுத்தல், விளக்கேற்றல், தூபமிடுதல், தோத்திரம்பாடல், சுவாமி விக்கிரகங்களை கழுவுதல், திருத்தொண்டு செய்பவர்களுக்கு. வேண்டிய உதவி செய்தல், ஆனந்தக்கூத்தாடல், சிவனாடியார்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தல், அவர்களுக்கு வேண்டிய பொருள்கள் கொடுத்தல் ஆகியனவாகும். இச்சரியைத் தொண்டுகளை கடவுள் சிந்தனையுடன் செய்தல் வேண்டும்.

சரியை வழிபாடு செய்தவர்களுக்குச் சாலோகமுத்தி கிடைக்கும். சரியை வழிபாட்டை ஆண்டான் அடிமை வழி எனவும் கூறுவர். திருநாவுக்கரசு நாயனார், குங்குலியக் கலய நாயனார், நமிநந்தியடிகள், தண்யடிகள், இளையான் குடிமாற நாயனார், அப்பூதியடிகள், முதலான நாயன்மார்கள் சரியை வழிபாட்டினால் முத்தி பெற்றவர்களாவார்.

ஆக்கம்
றக்சனா
தரம் - 8

முயற்சி உயர்ச்சி தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி விரதம்

(வாணி விழா போட்டியில் 1ம் பரிசு பெற்ற கட்டுரை)

சூரியன் கன்னி இராசியில் செல்வது புரட்டாதி மாதமாகும். இப் புரட்டாதி மாதம் வளர்பிறைப் பிரதமை முதல் நவமி முடிய வரும் ஒன்பது நாளும் கும்பத்திலே பூசை செய்து தேவியை அனுட்டிக்கும் விரதமாகும். இதில் வரும் அட்டமிக்கு மகா அட்டமி என்றும் நவமிக்கு மகா நவமி என்றும் பெயர். இதனால் இதை மகாநோன்பு என்று சொல்லிக் கொண்டாடுவர்.

இது தேவி உபாசகர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும். விரதமாகும். இந்த ஒன்பது இரவுகளிலும் முதல் மூன்று நாட்களிளும் வீரத்தை வேண்டி துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்களிளும் செல்வத்தை வேண்டித் திருமகளையும், இறுதி மூன்று நாட்களும் கல்வியை வேண்டிக் கலைமகளையும் நினைத்து பூசித்து விரதம் அனுட்டிப்பர். நோன்பு நோற்பவர்கள் பிரதமையில் எண்ணெய் முழுக்காடி நோன்பைத் தொடங்க வேண்டும். இவ்விரதம் அனுட்டிப்போர் முதல் எட்டுநாளும் ஒரு போது உணவு உட்கொண்டு ஒன்பதாவது நாளான மகா நவமியில் உபவாசம் இருத்தல் உத்தமம். இந்நோன்பு நாட்களில் அபிராமிஅந்தாதி, குமரகுருபரர் சகலகலாவல்லிமாலை போன்ற பாடல்கள் சிறப்பாகப் பாராயணம் செய்யத்தக்கன. ஒன்பது நாள் இரவு பூசைகளும் முடிந்த பத்தாவது நாள் விஜயதசமி விழா நடைபெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தவர் நவராத்திரி காலங்களில் ஆலயங்களிலும் வீடுகளிலும் கொலு வைத்து பூசைகள் செய்து வழிபடுவர். இவ்வாறு கொலு வைத்தலில் தத்துவம் உள்ளது. சக்தி, ஒன்றாய் அரும்பி, பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய் அனைத்துப் பொருட்களிலும் ஜீவராசிகளிலும் ஊடுருவி நிற்கின்றார். அத்தத்துவத்தை சூட்டும் ஒரு செயல் வடிவமே பலவிதப் பொம்மைகள் பாவைகள் முதலானவற்றை கொலுவைத்து நவராத்திரியில் வழிபடுதல் ஆகும்.

இந்நாள் புதிதாக வித்தைகள் தொடங்குவதற்குரிய நன்னாளாகும். பெரும்பாலும் சிறுவர்களுக்கு விஜயதசமி அன்று ஏடுதொடக்கல் நடைபெறும். நவராத்திரி காலப் பூஜைக்குரிய சிறப்பு மலர்கள், கோங்கும் மகிளமுமாம். சிறப்பு நிவேதனப் பொருட்கள் பொங்கல், அவல், வடை, தேன்குழல், எள்ளுருண்டை முதலியனவாம். விரதபலன் சகல சௌபாக்கிய சம்பத்துக்களும் பெறுதலாகும் இவ்விரதத்தின் பயன் அறிந்து அனுட்டிபபோம்.

ஆக்கம்

டி.லினுசி

தரம் - 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபநிடதம்

எமது சமயத்தின் முதன்மை நூல்களாகப் போற்றப்படுபவை வேதமும் சிவாகமமும் ஆகும். இவற்றிலே வேதம் அடர்ந்து வளர்ந்ததொரு மரம் என்றால் அதன் பழுத்த கனிகளே உபநிடதங்கள் ஆகும். உபநிடதங்கள் "வேதசிரசு" "வேதாந்தம்" என்றும் சிறப்பித்துக் கூறப்படுகின்றன.

சமஸ்கிருத மொழியில் அமைந்துள்ள கந்த உபநிடதங்களைப் பாரசீக மொழியில் மொழிபெயர்த்த பெருமை பிற மத இளவரசன் ஒருவனையே சாரும். அவன் பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்த மொகலயப் பேரரசான சாஜகானின் மூத்த மகனாகிய "தாராசிகோ" என்பவன் ஆவான். பெரும்பாலும் பாரசீக மொழியில் இருந்தே உபநிடதங்கள் பல்வேறு மேல் நாட்டு மொழிகளுக்கு மொழி பெயர்க்கப்பட்டன. உலக மேதைகள் பலர் உபநிடதங்களால் கவரப்பட்டனர். "ஷோப்பன்ஹோ " எனும் ஜேர்மன் தத்துவஞானி ஒவ்வொரு நாளும் இரவில் படுக்க போகுமுன் உபநிடதங்களிலிருந்து சில சுலோகங்களைச் சொல்லிப் பாராயணம் பண்ணுவதை ஒரு விரதமாகக் கொண்டிருந்தார்.

" உப நிடதங்கள்" என்றால் மறைபொருட்கோட்பாடுகளை ஒரு தேர்ச்சி பெற்ற குருவிடமிருந்து கேட்டல் என்று பொருள்படும். இவ்வாறு உபநிடத அறிவுரைகளை போதிக்கும் ஆசிரியர்கள் உலகியல் ஆரவாரங்களினின்றும் நீங்கி இயற்கை வனங்களில் ஒதுங்கியிருந்து மெய்யியல் ஆராச்சிகளில் ஈடுபட்டு மெய்யுணர்வுகைவரப் பெற்ற அறிஞர்களாக இருக்க வேண்டும்.

இந்து மதத்தின் கொள்கைகளை விளக்கும் உபநிடதங்களின் எண்ணிக்கை108 ஆகும் இவற்றுள்

- ஈசாவஸ்ய உபநிடதம் — மாண்டூக்ய உபநிடதம்
- கேன உபநிடதம் — தைத்திரிய உபநிடதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கயே உபநிடதம் — சாந்தோக்கிய உபநிடதம்
* பிரஸ்ன உபநிடதம் — பிருஹதாரணிய உபநிடதம்
* முண்டக உபநிடதம் — ஐதரேய உபநிடதம்

ஆகிய 10 உம் சிறப்பானவை. இறைவன காலம் இடம் என்று இரண்டிலுமே நீக்கமற நிறைந்துள்ளான். எல்லா வடிவங்களும் பிரம்மமே ஆரம்பமும் முடிவும் பிரம்மமே. ஒவ்வொரு உயிரிலும் பிரம்மம் உறைகின்றது. பிரம்மமே ஆன்மா என்கிறது உபநிடதம் எனவே மக்கள் இறைவன் பற்றிய உண்மையை அறிந்து கொள்வதோடு மட்டும் நிறுத்தி விடாது இறைவனை இடையறாது உணரும் நிலையை எய்தல் வேண்டும். இந்த உயர் நிலையை ஒருவன் எய்யும் போது அவன் பிறப்பு இறப்பு என்ற சக்கரத்திலிருந்து விடுதலை பெற்று வீடு பேறு அடைகிறான். அவனது ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலந்து விடுகின்றது. அந்நிலையில் அவன் இன்ப துன்பங்களையும் பிறப்பு இறப்புகளையும் கடந்தவனாகிறான். இவ்வாறு மக்களின் ஆன்மீக ஈடேற்றத்தைப் பற்றி உபநிடதங்கள் கூறுகின்றன.

எஸ். கிரண்ராஜ்
தரம் - 7

> உபநிடதங்களின் வழி தூய வழி. பிறருக்காகத் தன் வாழ்வையே எவ்வித துயரமும் இன்றிக் கொடுக்க வேதாந்தியால் மட்டுமே முடியும்.
>
> சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமை விரதங்கள்

கடமை விரதங்களாக பூரணை, அமாவாசை விரதங்கள் அனுட்டிக்கப்படுகின்றன. இவ்விரண்டினுள் பூரணை விரதம் தாயாருக்காக அனுட்டிக்கப்படும் விரதமாகும். பூரணைகளுள்ளும் சித்திரை, ஐப்பசிப் பூரணை சிறந்தவையாகும். சித்திரை மாதம் தேவர்களுக்கு 15 நாளிகை முதல் 20 நாளிகை வரையுள்ள பகற் பொழுதாகும். இது தேவர்களுக்கு மதிய வேளை மதியவேளையும் பிதிர் காலமும் ஒன்றாதலால் இச் சித்திரைப் பூரணை விசேடம் பெறுகின்றது.

தமது தாயை நினைத்து மாதம் தோறும் இடம் பெறும் பூரணை விரதத்தை அனுட்டிக்க இயலாதோர் சித்திரைப் பூரணையை அனுட்டித்தல் வேண்டும். இப் பூரணை விரதத்தை அனுட்டிப்பின் மற்றைய பூரணை விரதங்களையெல்லாம் அனுட்டித்த பலனை பெறலாம் என்றும் நம்பப்படுகின்றது. இவ் விரதத்தை முதன் முதலாக அனுட்டிப்பவர்கள் ஐந்து அல்லது ஒன்பது கலசங்களை வைத்து சித்திர குப்தனையும் எட்டுதிக்கும் பாலகரையும் ஆவாகனம் பண்ணி வழிபட்ட பின் அந்தணர் ஏழைகளுக்கு தானம் வழங்கி பிராமணபோசனமும் செய்வித்தல் வேண்டும். அன்றைய தினத்திலேயே சகல பலன்களையும் தரவல்ல இந்திர விழாவை கொண்டாடுதல் வழக்கம் எனத் தேவி புராணம் கூறுகின்றது. முறிக்கொளுந்தினால் இந்திரபூசை செய்தல் சாலச்சிறந்ததாகும். இத்தினத்தன்று பொங்கலிட்டு தெய்வ வழிபாடு செய்தல் ஏழைகளுக்கு கஞ்சி ஊற்றுதல் ஆகியன இடம்பெறும் இக்கஞ்சியைச் சித்தரைக்கஞ்சி என்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திர குப்தபூஜை விரதம் அனுட்டிப்போர் அன்று முழுவதும் உப்பில்லா உணவு உண்டு விரதம் இருத்தல் வழமையாகும். அத்தோடு பொன், வெள்ளி ஆகிய பதுமையில் சித்திர குப்தனை இருத்தி நியம வழிபாடு செய்து அன்னம் வெல்லம் கலந்த எள், பால், நெல், பாயாசம் ஆகியவற்றை நிவேதனமும் செய்தல் வேண்டும். சித்திரை பௌர்ணமித்தினம் மிகவும் புண்ணியம் வாய்ந்த தினமாகும்.

அமாவாசை பிதிர் வழிபாட்டுக்குரிய புண்ணிய தினம் ஆகும். திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே உள்ள தூரத்தை குறிப்பதாகும்.

சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்ந்து சஞ்சரிக்கும் நாள் அமாவாசை ஆகும். பூமியில் உள்ள மக்களைப் பொறுத்த வரையில் தென்புலத்தார் வழிபாட்டிற்கு மிக உகந்த நாள் ஆகும். சூரிய மண்டலத்திற்கு அப்பாலுள்ள தென் மண்டலத்தில் பிதிர்கள் உறையும் பிதிர் உலகம் உள்ளது. பிதிர்களையே தென்புலத்தார் என்போம் எமது முன்னோர் எள்ளும் தண்ணீரும் இறைத்து பிண்டம் போட்டு தென்புலத்தாரை வழிபாடு செய்து வந்துள்ளனர். அதனை நாம் இப்போதும் பின்பற்றுகின்றோம் பின்பற்றுதல் அவசியமானதும் ஆகும்.

திதிகள் பூர்வபக்க, திதிகள் அபரபக்க திதிகள் என இரு வகைப்படும். அமாவாசையை அடுத்து வரும் பிரதமை முதல் பௌர்ணமி வரையுள்ள திதிகள் அபரபக்கம் எனப்படும். பூர்வபக்கம் அபரபக்கம் என்பவற்றை முறையே சுக்கிலபட்சம், கிருஸ்ண பட்சம் எனவும் வளர்பிறை, தேய்பிறை எனவும் சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதி செய்து வழிப்படுவதுதான் சிரார்த்தம் எனப்படும். உயிரினங்களை நற்கதி அடையச் செய்ய சிரார்த்தம் இன்றி அமையாததாகும். ஆடி அமாவாசை அன்று புண்ணிய தீர்த்தங்களில், கடலில் தீர்த்தமாடல் எமது பாவத்தைக் கழுவுவதோடு பிதிர்களை நினைத்து செய்யும் வழிபாடு பிதிர்கள் நற்கதி பெற உதவுகின்றது. சூரியன் தெற்கு நோக்கி சஞ்சாரம் செய்ய ஆரம்பிக்கும் காலம் ஆடி மாதம் ஆதலால் ஆடி அமாவாசையில் பிதிர்த் தர்ப்பணம் செய்தல் மிக உகந்ததும் நற் பலன்களை அளிக்க வல்லதாகும்.

அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் அமாவாசையன்று தீர்த்தமாடி வழிபாடு செய்தல் மிகச் சிறப்பாக இடம் பெற்று வருகின்றது. பிதிர்க் கடன்கள் செய்தல் பிதிர்ளை பிரீதிப்படுத்துவதோடு கடமை செய்வோர்க்கும் நற்பேறுகளையும் அளிக்கின்றது. தேவர்களைப் பிரீதி செய்வதற்கு யாகங்கள், ஹோமங்கள், வேள்விகள் ஆகிய முறைகள் உள்ளன. சீரார்த்தம் தர்ப்பணம், பிண்ட தானம் என்பனவே பிதிர்களைப் பீரிதி செய்யும் முறைகளாம்.

இக் கடமைகள் எல்லாம் பெரும்பாலும் ஒரு குடும்பத்தில் புத்திரர்களாலேயே செய்யப்படுகின்றது. மனிதன் தெரிந்தும் தெரியாமலும் தவறுகள் செய்கின்றான். புத்தி பூர்வமாகச் செய்யப்படும் பாவங்களை ஒருவன் அனுபவித்தே தீரவேண்டும் புத்தி பூர்வமாகச் செய்யப்படும் குற்றங்கள் அவனிறந்தபின் செய்யப்படும் தகனக் கிரியை, அந்தியேட்டி, சபிண்டீகரணம், மாசியம், சிரார்த்தம் ஆகியன மூலம் அகற்றப்படுகின்றன. இவற்றுக்கு பிராயச்சித்தம் உண்டு இதனால் தான் பிள்ளைகள் அமாவாசை, பௌர்ணமி காலங்களில் அனுட்டிக்கும் விரதங்கள் அவர்களது பெற்றோர்கள் தாம் வாழ்ந்த காலத்தில் புத்தி பூர்வமாகச் செய்த பாவ வினைகளை போக்க உதவுகின்றன. இதனால் அந்த ஆன்மாக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடேற்றம் பெறுகின்றன. இதுவே மகன் தந்தைக்காற்றிய உதவியெனக் கொள்ள இடமுண்டு.

"புத்" என்பது கொடிய நரகத்தின் பெயராகும் இக் கொடிய நரகத்தில் வீழாது தனது பெற்றோரை காப்பவனே புத்திரனாகின்றான் இந்த வகையில் இவற்றின் உள்ளர்த்தத்தை அறிந்த தென் புலத்தார் வழிபாட்டு முறைகளை ஓம்புதல் இரு சாரரக்கும் நன்மையளிக்கும் என்பதில் ஐயமில்லை.

ஜி. சதீஸ்ராஜ்
தரம் - 8

**அறிஞர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிரேஷ்ட பிரிவு
# மாணவரின்
# சிந்தனைத் துளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவுருவ வழிபாடு

தன்னை விரும்பி வழிபடுவோருக்குத் தன்னருட் காட்சியைக் கொடுக்கும் பொருட்டு இறைவன் உறையும் இடங்கள், கோயில்களாகும். திருக்கோயில் வழிபாடு என்பது சமய ஒழுக்கத்துக்கு நிறைவு தரும் ஒரு அரங்கமாகும். மனிதனுக்கு ஆன்மீக அறிவை ஊட்டி வளர்ப்பதற்காக அமைக்கப்பட்ட ஆலயங்களில் அவனது அறிவு, இச்சை, செயல் ஆகிய மூன்றிற்கும் நிறைவு தரும் மூவகை முறைகள் இருப்பதைக் காணலாம். ஆலய அமைப்பு முறை, ஆராதனை முறை, தரிசன முறை என்பனவே அவையாகும். திருவுருவங்கள், அவற்றிக்குரிய இடங்கள், யந்திரங்கள், பிரதிட்டைகள், முதலியனவும் அவை அமைக்கப்பட்டிருக்கும் விதங்களும் ஆலய அமைப்பு முறையைச் சார்ந்தனவாம். ஆலயத்தில் அடியார்கள் சென்று வழிபடும் முறை தரிசனம் எனப்படும். இம்மூன்று முறைகளும் தனித்தனியே அறிகுறிப்பொருள், அருள் நெறிப்பொருள், அனுபவப்பொருள் என மூவகைப் பொருட்களைக் கொடுப்பனவாம்.



திருக்கோயில் திருவுருவ வழிபாடு தனி ஒரு மனிதனுக்கென உருவாகவில்லை. மக்கள் அனைவருஞ் சென்று வழிபடுவதற்காக தோன்றியவையே அவையாகும். மக்களின் எண்ணிக்கைத் தொகை பெரிது. எளிதாய் வழிபடும் முறைக்கு ஏற்ப அமைந்த சாதனங்களே சைவக்கோவிற் திருவுருவங்களாகும். எமது கட்புலனுக்குள் அடங்கச் செய்யும் முயற்சியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவே நாம் காணும் வழிபடும் திருவுருவங்கள். திருவுருவங்கள் பல வகைகளில் உள்ளன சிவலிங்கத் திருமேனியை உணரும் பக்குவம் இல்லாதவர்களது வழிபாட்டுக்குரிய திருஉருவம் கை, கால் முதலிய உறுப்புக்களுடன் கூடிய உருவத்திருமேனி ஆகும். திருவுருவ வழிபாட்டு முறை நம் சைவ சமயத்தில் நிலவி வருகின்றன. பழம்பெரும் நாகரிக நகரங்களாக விளங்கி இன்று அழிந்திருக்கும் மொ□ஞ்சதாரோ □ரப்பா நகர அகழ்வாய்வின் போது சிற்சில இடங்களிற் கண்டெடுக்கப்பட்ட தெய்வத் திருவுருவச் சிலைகளே இக்கருத்துக்குச் சான்றாகும். திருவுருவங்கள் இறைவனை நினைவு கூர்ந்து மனதால் உணர்ந்து கொள்வதற்கு துணை நிற்பதோடமையாது அதன் பெருமையினை அறிவதற்கும் உதவியாக விளங்குகின்றன.

எம். பிரியதர்சினி
தரம் - 9


**பிறருக்காக வாழும் போது தான் நாம் வாழ்க்கையின் நிறைவை நுகர்கிறோம். நம் உயர்வை உணர்கிறோம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருலிங்க சங்கம வழிபாடு



'குரு' என்றால் பாசத்தை நீங்குபவர் அல்லது 'அஞ்ஞானம்' எனும் இருளை அகற்றுபவர் என்பது பொருள். தீட்சை அளித்தவரும், கல்வி போதித்தவரும் குரு ஆவார். சைவநெறிதழைத் தோங்கத் தேவாரத் திருவாசகங்களையும், மெய்கண்ட சாத்திரங்களையும் அருளிய சமய குரவர்களும், சந்தான குரவர்களும் போற்றி வழிபடுவதற்கு உரியவர்களே குருமார்கள். வாழ்க்கையில் பரிபக்குவம் ஏற்பட்டு பிறவியை ஒழிக்க ஞானாசாரியராக வருபவர் ஞானகுரு எனப்படுபவர். யாம் அறியாமல் எமது உள்நின்று நடத்தும் திருவருட் சக்தியை எமது பக்குவ நிலையில் யாம் கண்டுணர்ந்து வழிபடவும், எம்மை வழிப்படுத்தவும் மானிடப் போர்வையில் குருவாக வந்து எம்மை ஆட்கொள்கின்றது சகலராகிய எம்முன்னோர்க்கு இறைவன் நேராக வராமல், குருவைச் சார்ந்து நின்றே அருள் செய்கின்றார். எனவே குருவே எமது கண்கண்ட தெய்வம் என்பதில் ஐயமில்லை. குருவின் அருளாலேயே இறைவனை அடைய முடியும்.

மன, மொழி மெய்களால் வணங்குவதற்குரிய சிவசொருபமாகவும் இருப்பதோடு குருவானவர் வாழ்வில் பின்பற்றுவதற்குரிய சிறந்த இலட்சியமாகவும், ஆன்மீகத் துறையில் சந்தேகங்களைப் போக்கி நல்வழிப்படுத்தும் வழிகாட்டியாகவும் விளங்குகின்றார். குருவிடம் ஞான நூல்களைக் கேட்கும் போது அடக்கத்துடனும், பக்தியுடனும், கவனமாகக் கேட்க வேண்டும். குருவுக்கு செய்யும் சேவை மிகச் சிறந்த தொண்டாகும். குருவை நாம் உள் அன்போடு வழிபட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவலிங்கம் சிவபெருமானின் அருவுருவத்திருமேனி. அது ஞான சோதி மயமானது. பீடம் சக்தியையும், இலிங்கம் சிவத்தையும் குறிப்பது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கத்திலுள்ளவர்களும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் முதலிய திருமேனிகளை வழிபடுதற்குரியவர். சரியையாளர், இறைவனது உருவத் திருமேனிகளைச் சிவனென வழிபடுபவர், கிரியையாளர். அருவமாகிய பரம்பொருளை வழிபடுபவர் யோகிகள். திருமேனியை பூசித்து வழிபடுபவர் சிவலிங்கம் பார்த்த லிங்கம் அல்லது தாவர லிங்கம் என இருவகைப்படும்.

சிவனடியார் கூட்டம் சங்கமம் எனப்படும் சிவபெருமானிடம் மெய்யன்பு பூண்டொழுகுவோர், சிவனடியார் ஆவார். அவர்கள் சிவபெருமானை நினைத்தாலும், அவரைப் பற்றிக் கேட்டாலும், அவரது தெய்வத் திருமேனிகளைக் கண்டாலும், தம்வசமிழப்பர். சிவபெருமானுக்குத் தொண்டு புரிந்தும், அவரது புகழ் பாடியும், திருவைந்தெழுத்தை ஓதியும், இன்புறுவர், சிவபெருமனை நினைக்கச் செய்யும் சிவசின்னங்களணிந்த திருமேனியுடையவராக இருப்பர். அடி யார்க்குரிய பாவனை, செயல், வேடம் இவற்றையுடைய எவரும் சிவமாகிக் கருதி வழிபடுவதற்கு உரியவரேயாவர். சிவனடியார்களைக் காணச் செல்லுங்கால் கையில் யாதேனும் கொண்டு செல்லுதலும் அதனை அவர்முன் வைத்து வணங்கலும், அவர் அனுமதியுடன் இருந்து அவர் கூறும் நல்லுரைகளைக் கேட்டலும் முறையாகும். நமது இல்லத்துக்கு வரும் அடியாரை எதிர் கொண்டு வரவேற்று இன்சொல் கூறி, ஆசனத்திருத்தி உபசரித்து வணங்கி, அவர் செல்லுங்கால் வாசல் வரை சென்று வழியனுப்பி வருதல் வேண்டும். நாயன்மாருள் திருநீலகண்டர், இயற்பகையார் சிறுத்தொண்டர், இளையான் குடிமாறன் முதலியோர் சிவனடியார்களை வழிபட்டு வீடுபேறு எய்தியவர்களாவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார் நடுவுளிருக்கும் அருளைப் புரியாய், என்று வேண்டுகிறார் மணிவாசகப் பெருமான். "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்கிறார். அப்பர் பெருமான், சுந்திரமூர்த்தி சுவாமிகள், திருத்தொண்டர் தொகையில் ஒவ்வொரு நாயன் மாரையும் வாழ்த்தி அவர்களுக்குத் தாம் அடியார் எனக் கூறியதோடு, அப்பாலும் அடிசார்ந்த அடியார்க் கொல்லாம் தம்மை அடியாரெனக் கருதிக் கொள்கின்றார். சிவபிரானிடம் உள்ள அன்பு, அவரது அடியாரிடமும் பரவுவதால் அவர் மேலுள்ள அன்பு மேலும் வளர்ந்து உறுதிப்படுத்துகின்றது.


எஸ். அகிலா

தரம் - 9

**மறையாத ஆறுதல் அளிக்கக்கூடியது ஒவ்வொருவர் மனதுக்குள்ளேயும் ஒளித்திருக்கும் உள்ளொளியே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மணித்திருநாட்டில்



- தேவாரம் பாடப் பெற்ற திருத்தலங்கள் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம்
- திருப்புகழ் பாடப்பட்ட தலம் கதிர்காமம்
- அறுபத்து நான்கு சக்திபீட ஆலயங்கள் நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில் முன்னேஸ்வரம்
- ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படுவது காரைநகர் சிவன் கோயில்
- ஈழத்து திருச் செந்தூர் எனப் போற்றப்படுவது எழுவை தீவு முருக மூர்த்தி கோவில்
- தண்ணீரில் விளக்கு எரியும் சிறப்பு பெற்ற ஆலயம் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்
- செங்குந்த மரபு பேணும் ஆலயம் நல்லூர் கந்தசாமி ஆலயம் யாழ் சட்டநாதர் சிவன் கோயில்
- தான் தோன்றி ஈச்சரங்கள் கொக்கட்டிச் சோலை தான் தோன்றீச்சரம் ஒட்டிசுட்டான் தான் தோன்றீச்சரம்
- பாவம் தீர்க்கும் தீர்த்தங்கள் கீரிமலை, பாவநாசம், பாலாவி
- சிவனின் பாதச் சுவடு எனப் போற்றப்படுவது சிவனொளி பாதமலையில் உள்ள பாதம்.

பி.கோகிலா

தரம் - 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுமியங்கள்

(வாணி விழாப் போட்டியில் முதலாம் பரிசு பெற்ற கட்டுரை)

மனித வாழ்வை மேம்படுத்தும் வகையில் கடைப்பிடிக்கப்படும் பெறுமதிமிக்க வாழ்க்கைப் பண்புகள் விழுமியங்கள் எனப்படும். உலகிலுள்ள எல்லா மதங்களினுடைய நோக்கிலும் சமயம் என்பது ஒரு வாழ்க்கைநெறி அல்லது வாழும் மறை என்று குறிப்பிடலாம். கடவுளின் படைப்புகளில் மனிதனே மேலான படைப்பாகும். விலங்கு வாழ்க்கையிலிருந்து வேறுபட்டு மனிதன் மனிதனாக வாழ்வதற்கு உதவுகின்ற பெறுமதிமிக்க வாழ்க்கைப் பண்புகள் விழுமியப் பண்புகளாகும்.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்"**

என்கிறார் திருவள்ளுவர்.

இன்று விஞ்ஞான, தொழிநுட்ப தொடர்பாடல் சாதனங்கள் அற்புதமாக வளர்ச்சியடைந்துள்ளன. இதன் பயனாக மக்களின் வாழ்க்கை வசதிகள், நவநாகரிகங்கள் என்பன மக்களிடையே பெருகியுள்ள போதிலும் மக்கள் இன்பமாக வாழ்கின்றார்கள், எனக்கருத முடியாதுள்ளது. மக்கள் மத்தியில் காணப்படுகின்ற ஆசை, மோகம், சுயநல வேட்கை என்பனவே அவர்களின் துன்பத்திற்குக் காரணமாக அமைந்திருக்கின்றது. சைவசமயம் வலியுறுத்தும் முக்கிய அறமாக ஒழுக்கமும், அன்பு நெறியும் அமைகிறது.

**"ஒழுக்க வாழ்வின் மூலம் பின்பற்றப்படுகின்ற நடத்தைகள் யாவும் விழுமியங்களாகும்"**

வாய்மை, அன்புடைமை, பிறரை மதித்தல், ஒழுக்கமுடைமை, செய்ந்நன்றி மறவாமை, பிற உயிர்கள் மீது அன்பு காட்டுதல், நேர்மையாக நடத்தல், மூத்தோரை மதித்தல், நல்ல பழக்க வழக்கங்களைப் பேணுதல் போன்ற மனித வாழ்க்கையை மேம்படுத்தும் விழுமியங்களைக் கடைப்பிடிப்பதன் மூலமாகவே மனித வாழ்க்கையை மேம்படுத்தலாம்.

## வாய்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மை என்பதற்கு "தீமைதராத சொற்களை விளம்புதல்" என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

**"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொல்"**

மகாத்மா காந்தி, அரிச்சந்திரன் போன்றோர் "வாய்மையே வெல்லும்" என்ற இலட்சிய வாழ்விற்கு முன்னுதாரணமாக விளங்கினார். வாழ்க்கையில் பெறற்கரிய செல்வங்கள் யாவும் ஒழிந்து போயினும் "வாய்மை தவறோம்" என்று அரிச்சந்திரன் கூறிய வாக்கு, வாய்மையின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது.

## அன்புடைமை

**"அன்பின் வழியது உயிர்நிலை.........."** என்பது வள்ளுவர் வாக்கு. பிறகு உயிர்களுக்கு அன்புகாட்டுதல், பேணுதல் என்பன அன்பே வடிவான கடவுளுக்குப் பிரியமான தொண்டாக அமையும். அதன் மூலம் சமயம் வலியுறுத்தும் இலட்சிய வாழ்வும் நிறைவு பெறும். அதனால் அன்பினை உள்ளத்திலிருத்தி, அதனை எப்பொழுதும் நினைத்துச் செயற்படுதல் எமது கடமையாகும்.

**"எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவும் நின்**
**தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"**

என்கிறார் தாயுமானவர்.

## இனியவை கூறல்

மாசற்ற மனம், நல்லசொல் ஊற்றெடுக்கும் சிறந்ததொரு அடித்தளமாகும். இரக்கம் நல்லொழுக்கம், அடக்கம் என்பனவற்றை ஒவ்வொருவரும் தமது உயிரிலும் மேலாக மதித்து வாழ வேண்டும். இத்தகைய பண்புகள் மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்துகின்றன. இனியவை கூறல் என்பது ஒருவருக்கு ஆறுதலாக பேசுதல் எனப் பொருள்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறரை மதித்தல்

நாம் நம்மை ஒத்த பிறரையும், ஆசிரியர்கள், மாணவர்கள் பெரியவர்கள், பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரையும் சமமாக மதித்துப் பழக வேண்டும். ஏழை எளியவர்களுக்கு உதவி செய்தல் வேண்டும். அதனை, புத்தப்பெருமான் "உடலில் ஓடும் இரத்தத்தின் நிறம் அனைவருக்கும் சிவப்புதான், வியர்வையின் நிறம் அனைவருக்கும் ஒன்றுதான்" என்று குறிப்பிடுகின்றார். இக்கருத்து, பிறரை மதித்தலைப் பற்றி வலியுறுத்துகின்றது.

## செய்ந்நன்றி மறவாமை

ஒருவர் நமக்கு உதவி செய்யும் போது அவ்வுதவியை நாம் மறக்கக் கூடாது ஒரு சிறிய உதவியாக இருந்தாலும் தக்க சமயத்தில் செய்யும் உதவியானது உலகத்தை விடவும் பெரிதாகக் கருதப்படும். அவ்வுதவியானது எவ்வித பயன் கருதியும் செய்யாத விடத்து இறையருள் கிட்டும். கர்ணன், அர்ஜுனன், குகன், இராமன் ஆகியோர்கள் செய்நன்றி மறக்காமலும், பயன்கருதாது உதவி செய்தவர்களுமாவர்.

## பிற உயிர்கள் மீது அன்பு காட்டுதல்

ஆறறிவுடைய மனிதன் ஐந்தறிவுடைய விலங்குகள் மீதும் பறவைகள் மீதும் அன்பு காட்ட வேண்டும். அவற்றைத் துன்புறுத்தக்கூடாது.
**"அன்பும் சிவமும் ஒன்று தான்"** எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார். சைவத்தின் நோக்கம் உயிர்கள் கடவுளை அடைவதாகும். சிபிச்சக்கரவர்த்தி ஒரு புறாவிற்காகத் தன்னையே கழுகுக்கு அர்ப்பணித்தார். இதன் மூலம் வலியுறுத்தப்படுவது பிற உயிர்கள் மீது அன்பு காட்டுதல் என்பதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடமை

கடமை என்பது உரிமைக்கு முதன்மையானது. அதாவது கடமையைச் செய்யும் போது உரிமைகள் தானாகவே வந்துசேரும். கடமையைச் செய்யும் போது நேர்மையாகவும், நேரம் தவறாமலும் செய்ய வேண்டும். மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், அலுவலர்கள் ஆகியோருக்கென்று பல கடமைகளும், உரிமைகளும் உள்ளன. ஒரு நாட்டின் ஆட்சியாளன் தன் கடமையைச் சரிவரச் செய்யும் போது நாடு செழிக்கும். ஒரு இல்லத்தலைவன் தன் கடமையைச் செய்யும் போது இல்லத்தில் மகிழ்ச்சி குதூகலம் பொங்கும்.

## நல்ல பழக்க வழக்கங்களைப் பேணுதல்

உண்மை பேசுதல், பெரியோரை மதித்தல், களவு, கொலை, போன்வற்றை தவிர்த்தல், பிறர் மனம் புண்படாதவாறு பேசுதல், போன்றவை சில நல்ல பழக்கங்களாகும். பாடசாலைக்கு நேரத்துடன் செல்லுதல், ஆசிரியர் சொற்படி நடத்தல், பாடங்களைச் சரிவரக் கற்றல் போன்றவை நல்ல பழக்கவழக்கங்களாகும். இவற்றைப் பின்பற்றுவதன் மூலம் மனிதன் ஒரு நல்ல நிலையை அடைவதுடன், நற்பிரஜையாக சமூகத்தில் மதிக்கப்படுவான்.

விழுமியங்களைப் பின்பற்றுவதன் மூலம் மனத்திருப்தி, மனமகிழ்ச்சி, ஒற்றுமை, சமத்துவம், சகோதரத்துவம், பணிவு, அடக்கம், இறையருள், முத்தி நிலையை அடைதல் போன்ற, நன்மைகள் ஏற்படும். விழுமியப்பண்புகளை பின்பற்றுபவர்கள் சமூகத்தில் உயர்வாக மதிக்கப்படுவதுடன், நல்ல நிலையிலும், ஒழுக்க மானாகவும், கல்விமானாகவும் திகழ்வார்கள். அவர்களுக்கு இறையருள் கிடைக்கும்.

**'ஒழுக்கம் உயர்வு தரும்"**

ஆ.காயத்திரி
தரம் - 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகமம் கூறும் கிரியைநெறி

ஆன்மீக ஈடேற்றம் பற்றிப் போதிக்கின்ற இந்து மதத்திலே அந்த ஈடேற்றத்தை அடைந்து கொள்வதற்காகக் கூறப்படுகின்ற மார்க்கங்களில் கிரியை என்பதும் ஒன்றாகும். கிரியையானது முத்திக்குரியதோர் சாதனமாகும்.இதனைச் சாஸ்திரங்கள்.

"கிரியை என மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கே" என்று கூறியுள்ளன. கிரியைகள் பற்றி முதலிலே எடுத்துரைத்த நூல்கள் ஆகமங்களாகும். ஆகமங்களிலே கூறப்பட்ட கிரியைகளை தெளிவாக விளக்குவதற்காக ஆக்கம் பெற்றவை பத்திகளாகும்.ஆகமங்களுடைய கிரியா விளக்க நூல்கள் பத்ததிகளாகும். ஆகம நூல்களிலே கிரியைகள் இரண்டாக வகைப்படுத்திக் கூறப்படுகின்றன.

1. பரார்த்தக் கிரியை
2. ஆன்மார்த்த கிரியை

## பரார்த்தக் கிரியை

பரார்த்த கிரியை எனப்படுவது பொது நன்மை கருதி ஆற்றப்படும் கிரியை ஆகும். இந்தப் பரார்த்தக் கிரியைகள் அனேகமாக ஆலயங்களிலேயே இடம்பெறுகின்றன. ஆதலால் இவற்றை ஆலயக்கிரியை என்றும் கூறுவார்கள். இந்த பரார்த்தக் கிரியைகள் சிவாகமங்களுடைய கிரியா காண்டப்பகுதி விளக்கமாகக் கூறுகின்றது. இந்தப் பரார்த்தக் கிரியைகள் நான்காக வகுப்படும்.

1. கர்ஷனம்
2. பிரதிட்டை
3. உற்சவம்
4. பிராயச்சித்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்ஷனம்

கர்ஷனம் என்றால் உழுதல் என்று பொருள்படும். அதாவது உழும்கிரியை கர்ஷனம் ஆகும். ஆலயம் அமைப்பதற்கான இடத்தைத் தெரிவு செய்து அதனை உழுது சமப்படுத்தி அங்கு ஆலயத்தை அமைக்கத் தொடங்கி, அமைத்து முடிக்கும் வரை ஆற்றப்படும் கிரியை கர்'னம் ஆகும்.

## பிரதிட்டை

ஆகம விதிப்படி அமைக்கப்பட்டதோர் ஆலயத்திலே நிறுவப்பட்ட மூர்த்திக்கு தெய்வீகத் தன்மையை உண்டு பண்ணுவதற்காக ஆற்றப்படுவது பிரதிட்டையாகும். இதனைக் கும்பாபிஷேகம், குடமுழுக்கு, பெருஞ்சாந்தி என்றும் கூறுவார்கள்.

மந்திரங்களாலும் கிரியைகளாலும் தெய்வத்தன்மை ஊட்டப்பட்ட கும்பநீரால் அபிடேகம் செய்தல் கும்பாபிஷேகம் ஆகும். பிரதிட்டை என்றால் நன்கு நிலை நிறுத்துதல் என்று பொருள்படும் அதாவது விக்கிரகங்களை பீடங்களோடு நிலையாக இணைத்துக் கொள்ளுதல் இதுவாகும். இந்தப் பிரதிட்டை ஆனது நான்கு வகைப்படும்.

1. ஆவர்த்தன பிரதிட்டை
2. ஆநாவர்த்தன பிரதிட்டை
3. புனராவர்த்தனப் பிரதிட்டை
4. அந்தரித பிரதிட்டை

## ஆவர்த்தனப் பிரதிட்டை

ஆவர்த்தன பிரதிட்டை எனப்படுவது பன்னெடுங்காலத்திற்கு முன்னர் நிறுவப்பட்ட ஆலயத்திலே கிரியைகள் இடம்பெற்று வரும்போது காடு படர்தல், மாண்மாரி சொரிதல், வெள்ளம் நுழைதல், தீ பரவுதல், இடிமின்னல் தாக்குதல் ஆகிய இயற்கை அனர்த்தங்கள் இடம் பெற்றால், அவற்றை நிவர்த்தி செய்து மீண்டும் தெய்வத்தன்மையை உண்டு பண்ணுவதற்காக ஆற்றப்படும் கிரியை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆநாவர்த்தனப் பிரதிட்டை

ஆகம விதி முறைகளுக்கு அமைவாகப்பட்டதோர் ஆலயத்திலே தெய்வத் தன்மையை உண்டு பண்ணுவதற்காக இடம்பெறும் பிரதிட்டை அநாவர்த்தப் பிரதிட்டை ஆகும்.

## புனராவர்த்தனப் பிரதிட்டை

புனராவர்த்தனப் பிரதிட்டை எனப்படுவது ஆலயத்தைப் புனர்நிர்மாணம் செய்து ஆற்றப்படுவதாகும். ஆலயத்தில் உள்ள கோபுரம், விமானம், மண்டபம், தூண்கள் ஆகியவற்றில் சேதங்கள் ஏற்பட்டால், மூர்த்திகளில் சேதங்கள் ஏற்படாமல் அவற்றை நிவர்த்தி செய்வதற்காக, பாலஸ்தானம் செய்து, மீண்டும் தெய்வீகத் தன்மையை உண்டு பண்ணுவதற்காக, ஆற்றப்படுவதாகும்.

## ஆந்தரித பிரதிட்டை

ஆலயத்திலே குற்றம் குறைகள் இடம்பெற்றால் அதனை நிவர்த்தி செய்து தெய்வீகத்தன்மையை உண்டுபண்ணுவதற்கு ஆற்றப்படுவது ஆந்தரித பிரதிட்டை ஆகும். ஆலயத்திலே களவு நிகழ்தல், கொலை நிகழ்தல், இயற்கை மரணம் சம்பவித்தல் ஆகிய குற்றங்கள் இடம்பெற்றால், அவற்றை நிவர்த்தி செய்வதற்கு ஆற்றப்படுவது இதுவாகும்.

## உற்சவம்

ஆலயத்திலே உள்ள மூர்த்திக்கு இருக்கின்ற தெய்வீகத் தன்மையையும் பரிபாலனம் செய்வதற்கு ஆற்றப்படுவதே உற்சவம் ஆகும். உற்சவம் என்றால் உத்தமமான யாகம், உத்தமமான பஞ்சகிருத்தியம் என்று பொருள்படும். உற்சவமானது 3 வகைப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. நித்திய உற்சவம்
2. நைமித்திய உற்சவம்
3. காமிய உற்சவம்

## நித்திய உற்சவம்

ஆகம விதிமுறைகளுக்கு அமைவான ஓர் ஆலயத்திலே தினந்தோறும் ஆற்றப்படுகின்ற அலங்காரம், நைவேத்தியம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம், வாழ்த்து, நிருத்தியம் ஆகிய அலங்காரங்களைப் பின்பற்றி நித்திய உற்வசம் ஆற்றப்படும்.

நித்திய உற்சவமானது ஆலயங்களுடைய வளத்தன்மைக்கு ஏற்ப ஒரு காலம், இரண்டு காலம், மூன்று காலம், ஆறு காலம் பன்னிருகாலப் பூசையாக அமையலாம். திருச்செந்தூர் முதலிய தலங்களிலே 12 காலப் பூசை இடம்பெறும். அநேகமான ஆலயங்களில் ஆறுகாலப் பூசைகளே பெரும் வழக்கமாக இடம்பெறும் அவையாவன.

1. திருவனந்தல் பூசை அல்லது உஷாக்காலப் பூசை
2. காலைப் பூசை
3. உச்சிக் காலப் பூசை
4. சாயங்காலப்பூசை / சாயரட்சைப் பூசை
5. இரண்டாம் காலப் பூசை
6. அர்த்த ஜாமப் பூசை

## நைமித்திய உற்வசம்

நைமித்திய உற்சவம் எனப்படுவது விசேடமாக ஆற்றப்படுகின்ற உற்சவமாகும். அதாவது அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம், வாழ்த்து, நிருத்தியம் என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியைகளின் பொது அம்சங்களை விசேடமாக ஆற்றுதல், நைமித்திய உற்சவம் ஆகும். நித்திய உற்சவத்திலே விடப்படுகின்ற தவறுகள் நைமித்திய உற்சவத்தால் களையப்படும் இந்த நைமித்திய உற்வசமானது 6 வகைப்படும்.

1. வாரம் இரு முறை நிகழ்த்தும் நைமித்திய உற்வசம்

   உ + ம் : சுக்கிரவாரம்

   மங்கள வாரம்

2. பல வாரங்களுக்கு ஒரு தடவை நிகழும் நைமித்திய உற்சவம்

   உ+ம் : பிரதோஷம்

3. மாதம் ஒரு தடவை நிகழும் நைமித்திய உற்சவம்

   உ+ம் : சங்கராந்தி

   சதுர்த்தி

4. பல மாதங்களுக்கு ஒரு தடவை நிகழும் நைமித்திய உற்சவம்

   உ+ம் : நடராஜர் அபிடேகம்

5. வருடம் ஒருதடவை நிகழும் நைமித்திய உற்சவம்

   உ+ம் : மகோற்வசம்

6. பல வருடங்களுக்கு ஒரு தடவை நிகழும் நைமித்திய உற்சவம்

   உ+ம் : கும்பமேளா

## காமிக உற்சவம்

காமிக உற்சவம் எனப்படுவது யாதாயினும் ஓர் பயன்கருதி ஆற்றப்படும் கிரியை ஆகும். அதனால் கிரயைகள் நிஷ்காமிக உற்சவம் எனப்படும். பயனை எதிர்பாராது ஆற்றப்படும் கிரியை ஆகும். இந்த காமிக கிரியைகள் ஆற்றுபவருடைய தன்மையைப் பொறுத்து சிறு கிரியையாகவோ சங்காபிஷேகமாகவோ அமையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிராயச்சித்தம்

பிராயச்சித்தம் எனப்படுவது கழுவாய் எனப் பொருள்படும். அதாவது ஆலயங்களிலே இடம் பெறுகின்ற குற்றங்குறைகளை நீக்குவதற்காக ஆற்றப்படும் கிரியையாகும். கொலை நிகழ்தல், நாய் முதலிய விலங்குகள், பன்றி நுழைதல், பைத்தியக்காரர்கள் நுழைதல், வர்ணதர்மம், மாறிய பிரவேசங்கள் நிகழ்தல் ஆகிய குற்றங்குறைகள் இடம்பெற்றால் அவற்றைக் களைவதற்காக இடம்பெறுவது பிராயச்சித்தம் எனப்படும்.

இந்தக் குற்றங்களுள் கொலை, மரணம், களவு ஆகியவைகளின் குற்றங்களைக் களைவதற்கு சிறிய அபிஷேகங்கள், மந்திர உச்சாடணங்கள், அர்ச்சனைகள் இடம்பெறும்.

க. கவிதாஞ்சலி

தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயர் பிரிவு மாணவரின்


# உன்னதமான

# ஆக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதிகாசம் கூறும் அறம் அல்லது வாழ்க்கை நெறி



இந்து நாகரிக இலக்கியங்கள் வரிசையிலே பாமர இலக்கியங்களாகப் போற்றப்படுவனவற்றுள் இதிகாசங்களும் அடங்குகின்றன. மூல இலக்கியங்களான வேதங்களுடைய கருத்துக்களைச் சாதாரண பாமரமக்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக ஆக்கப்பட்டவையே இதிகாசங்கள் ஆகும். புராண இலக்கியங்களுக்கு அடுத்ததாக ஆகம இலக்கியங்களுக்கு முற்பட்டதாக இந்த இதிகாசங்கள் ஆக்கப்பட்டன. அத்துடன் வேத இலக்கியக் கருத்துக்களை ஓர் மனைவியின் மொழிபோல இனிமையாக எடுத்துரைப்பவை, இதிகாசங்களாகும். இதிகாசங்களாக இராமயணம், மகாபாரதம், சிவரகசியம் ஆகியன காணப்படுகின்றன. இதிகாசங்களானவை இந்துக்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான அறங்கள் பலவற்றையும் வகுத்துக் கூறியுள்ளன. இவ் அறங்கள் இதிகாசங்களின் கதைச் சம்பவங்கள் ஊடாக அதாவது மூலக்கதை, கிளைக்கதை சம்பவங்கள் ஊடாகவும் கதாபாத்திரத் தொடர்புகளின் ஊடாகவும் கூறப்படுகிறது. இதனால் இந்த அறங்கள் இந்துக்கள் மத்தியில் அதிக செல்வாக்கைச் செலுத்தியுள்ளன. இதிகாசத்தில் கூறும் முதன்மை வாய்ந்த அறம் பொறுமையாகும். இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுமையின் சிறப்புக்களை இராமாயணம் சகிப்பே தானம், சகிப்பே யக்ஞும், சகிப்பே கீர்த்தி என்று கூறியுள்ளது.

மகாபாரத்திலே தர்மன் பொறுமையின் சிகரமாகக் கூறப்படுகின்றார். முன்னம் பொறுத்தீர் இன்னும் பொறுப்பீர் என்பது தர்மரின் பொறுப்புரை ஆகும். கொடை என்பது சிறந்த அறமாகும். யார்க்கும் எதையும் இல்லை என்று சொல்லாது வாரி வழங்குபவனே சிறந்த கொடையாளியாவான் இதன் காரணமாக மகாபாரத்திலே கர்ணன் கொடைக்கு உதாரணமாக எடுத்துக்காட்டிக் கூறப்படுகிறது. அத்துடன் இரக்கம் என்பது சிறந்த அறமாகும். பிற உயிர்கள் துன்பப்படும் பொழுது அதனிலும் மேலாக துன்பமடைபவன் இரக்க குணம் உள்ளவனாக கூறப்படுகிறது. இதில் இராமாயணம் இராமனை இரக்க குணம் நிரம்பியவனாக கூறியுள்ளது.

இதன் காரணமாக வான்மீகி முனிவர் இராமனை கருணா காகுஸ்த என்று கூறியுள்ளார். ஆத்துடன் சினம் தவிர்த்தல் என்பதும் ஓர் அறமாகும். சினம் ஒருவனுடைய அகத்திலே பொங்கி எழும்ப பல பாதக விளைவுகளுக்கு இட்டுச் செல்லும். அகத்திலே எழுகின்ற கோபத்தினை நாகபாம்பு தோலை உரிப்பது போல உதறிவிடக் கூடியவனே உத்தமமனிதனாவான். அவனுடைய வாழ்க்கையே அறவாழ்க்கையாகும். மகாபாரத்தினுடைய ஓர் கிளைக் கதையிலே பொறியடக்கி நல்வாழ்வு வாழ்தல், சினம் தவிர்த்து வாழ்தல், அறவழியிலே பொருள் ஈட்டுதல், தான தர்மம் செய்து மன நிறைவோடு இருத்தல், வாழ்வில் பெருமிதமும் வாழ்வில் மனக்கவலையும் கொள்ளாமல் சமத்துவ மனநிலையோடு வாழ்தல் ஆகியவைகளை கடைப்பிடித்து வாழ்வது அறவாழ்வு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியம் என்பது பிரதான அறமாகும். மகாபாரத்திலே சத்தியத்தினுடைய சிறப்புக்கள் கூறப்பட்டுள்ளன. இந்த சத்தியமானது பொறியடக்கம், பிறர் குறை கூறாமை, சீரிய நடத்தை, நிலைத்த தைரியம், தெய்வபக்தி பிறர் பொருளுக்கு ஆசைப்படாமை ஆகியவற்றின் வடிவிலே காணப்படுவதாக அங்கு கூறப்பட்டுள்ளது. மகாபாரத்திலே வீஷ்ம பருவத்தில் பகவத்கீதையிலே இந்துக்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான முழு அறங்களும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. இராமாயணத்திலுள்ள யோக வசிட்டம் மகாபாரத்திலுள்ள ஜட்சம் வாதம் ஆகிய பகுதிகளிலும் அறக் கருத்துக்கள் நிரம்பியுள்ளன.

இராமயணத்திலே கிளைக் கதைகள் ஊடாக குலப்பெண்களுக்குரிய கடமைகள் வகுத்துக் கூறப்பட்டுள்ளன. குலப்பெண்கள் கணவனுக்கு உற்ற நண்பராகவும், அன்பராகவும், இன்றியமையாத வேண்டியவராகவும் இருப்பதோடு ஆசானாகவும், முதல்வராகவும் இருக்க வேண்டும். இதிகாசத்தில் வாழ்க்கையின் ஒவ்வோர் படி முறைகளிலும் உள்ளவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறங்கள் கூறப்பட்டுள்ளன. பிரம்மச்சாரிகள் குருபக்தி, குருவிசுவாசம், தெய்வபக்தி உடையவர்களாகவும் பொறியடக்கம், பொறிகளை ஒருவழிப்படுத்துதல் ஆகிய ஒழுக்கங்களை உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். ஏகலைவன், இராமன், அருச்சுனன் ஆகியோரை இந்த அறங்களுக்கு எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம்.

கிருகஸ்த நிலையிலே உள்ளவர்கள் பஞ்ச மகா யக்ஞக்களை தலையாய அறமாகக் கடைப்பிடிக்க வேண்டும். கிருகஸ்தத்திலே உள்ள தலைவர்கள் ஏகபத்தினி விரதமுடையவர்களாகவும் 'கணவனை கண்கண்ட தெய்வமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றுபவராகவும் இருக்க வேண்டும். இதற்கு எடுத்துக் காட்டாக இராமன், சீதை ஆகியோரைக் குறிப்பிடலாம். இதை விட இதிகாசங்களில் யுத்தத்திலே கடைப்பிடிக்க வேண்டிய அறங்களும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

அதாவது இதிகாசத்தில் நாம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய அறத்தினையும், வாழ்க்கைநெறியையும் பற்றி கூறப்படுகிறது. அதாவது பொறுமை, கொடை, இரக்கம், சினம், சத்தியம், கடமை போன்ற அறச் செயல்கள் இதிகாசத்தின் மூலம் கூறப்படுகின்றது. இதனைப் போலவே நாமும் நம் வாழ்க்கையில் இவ்வாறான அறச் செயல்களை கடைப்பிடிக்க வேண்டும் என்று இதிகாசம் கூறுகின்றது.

**எஸ்.ஷர்மிளா**

**12 கலைப்பிரிவு 2017**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து சைவ நிறுவனங்கள்

(வாணி விழாப் போட்டியில் முதலாம் பரிசு பெற்றக்கட்டுரை)

முன்னைய காலங்களில் ஈழமானது மேலைத் தேசத்தவர்களின் ஆட்சியில் காணப்பட்டது. அப்பொழுது சைவசமயம், பாதிப்புக்குள்ளாகிருந்து, புராதன சைவ ஆலயங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. ஒல்லாந்தருக்குப் பின் ஆங்கிலேயர் சமயசுதந்திரத்தை ஒருவாறு வழங்கிய போதிலும் அவர்களுடைய ஆதரவுடன் கிறிஸ்தவமத்தைப் பரப்ப வந்த மிஷனரிமார் சைவசமய விருத்திற்கு தடையாகவிருந்தமை, சைவசமய சின்னங்களைக் கேலிசெய்தமை, சைவ சமயிகளுக்கு அஞ்ஞானிகள் என்ற நாமத்தை சூட்டியமை போன்ற பல விடயங்கள் நடைபெற்றன. இதன் போதே, இந்நிலைமைகளை தவிர்ப்பதற்காக சமய நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. அவையாவன சைவ பரிபாலனசபை, சைவ வித்யா அபிவிருத்திச்சங்கம், கொழும்பு விவேகானந்த சபை, இராமகிருஸ்ண மிஷன், அகில இலங்கை இந்துமாமன்றம் என்பனவாகும்.

## சைவ பரிபாலன சபை

ஈழத்தில் சைவத்தையும், தமிழையும் வளர்த்த பெரியார்களைப் போன்று, நிறுவன ரீதியாக சைவசமய வளர்ச்சிக்கும், தமிழ்மொழி அபிவிருத்திக்குமாக கி.பி.19 ஆம் நூற்றாண்டில், அதாவது 1888 இல் தாபிக்கப்பட்டதே சைவ பரிபாலனசபை. இச்சபையானது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் எண்ணக்கனவின் தோற்றமாகும்.

கிராமங்கள் தோறும் சமயப் பிரசாரஞ் செய்தல், நாயன்மார்களின் குருபூசைத் தினங்களைக் கொண்டாடுதல், ஆலயங்களில் புராணபடனங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தல், சைவசமய பாட வகுப்புக்கள் நடாத்தியமை, 'நாவலர் மண்டபம்' அமைத்து. சபையின் நிகழ்வுகளை அங்கே நடாத்தியமை போன்ற பல சைவப்பணிகளை இச்சபை மேற்கொண்டது.

## சைவ வித்யா விருத்திச் சங்கம்

ஐரோப்பியர் காலத்தில் நலிவுற்றிருந்த சைவத்தமிழ் கல்விப் பாரம்பரியத்தைப் பேணிப்பாதுகாக்கும் நோக்குடன் 1923 ஆம் ஆண்டு, சேர்.பொன்.இராமநாதன், இந்துபோர்ட் சு.இராசரெத்தினம் என்போரால் ஆரம்பிக்கப்பட்டதே. இச் சங்கமாகும்.

இந் நோக்கத்துடன் இச்சங்கமானது யாழ்ப்பாணத்தில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி போன்ற இடங்களிலும் புத்தளம், வவுனியா, முல்லைத்தீவு, சிலாபம், போன்ற இடங்களிலும் பாடசாலைகளை நிறுவின. சைவத்தமிழ் புலமையை வளர்க்கும் நோக்குடன் சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையைத் திருநெல்வேலியில் அமைத்ததுடன் நான்கு கைத்தொழில் நிலையங்களை நிறுவி, பொருளாதார மேம்பாட்டுக்கும் உதவி புரிந்தன. அதுமட்டுமன்றி விபூதி தரிக்கும் பண்பாட்டை சைவமக்களிடையே வளர்த்தமை, சைவ அநாதை விடுதிகள் நிறுவியமை, தமிழ், இலக்கியம், சங்கீதம், நாடகம் வளர ஆவன செய்தமை. மாணவர்களின் நலன்கருதி நாடளாவிய ரீதியில் பரீட்சைகளை நடாத்தி சான்றிதழ், பரிசில்கள் வழங்கியமை போன்ற பணிகளையும் இச்சங்கம் செய்துள்ளது.

## கொழும்பு விவேகானந்த சபை

1902 ஆம் ஆண்டு யூலை 13 ஆம் திகதி கொழும்பு ஜிந்துப்பிட்டியில் கொழும்பு விவேகானந்த சபை நிறுவப்பட்டது. சைவ சமயத்தவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மீகம், கலாசாரம், தேகாரோக்கியம், பொதுநலச்செயற்பாடுகள் என்பவற்றை வளர்க்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இச்சபை சமயப்பணிகளையும் தாண்டி பல சமூகப்பணிகளை மேற்கொண்டது. கெந்தளையில் அமைந்துள்ள தொழு நோயாளர் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் சைவ நோயாளர்களின் வழிபாட்டுக்கென சபை 1956 ஆம் ஆண்டு முருகன் ஆலயம் ஒன்றை அமைத்தனர், வெலிக்கடை, மகரகம சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் நடத்தை மாற்றத்தின் பொருட்டும் ஞாயிற்றுக்கிழமை தோறும் சைவ நற்சிந்தனைகளை வழக்குதல், அங்குள்ள சைவசமயக் கைதிகளுக்கு வருடப் பிறப்பு, தீபாவளி முதலான பண்டிகைக் காலங்களில் ஆடைகளை அன்பளிப்பாக வழங்குதல் போன்ற பணிகளைச் செய்தது மட்டுமன்றி இன்று கொழும்பு வாழ் சைவ மக்கள் இறந்தோரின் இறுதிச் சடங்குகளை ஆற்றுவதற்கு உதவும் முகமாக சபையினர் கொழும்பு முகத்துவாரத்தில் அந்தியேட்டி மடம் ஒன்றை அமைத்து, பராமரித்து வருகின்றது, சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் நூற்றாண்டு ஞாபகார்த்தமாக சபையின் வளாகத்தில், சுவாமிகளது திருவுருவச்சிலை சபையினரால் அமைக்கப் பெற்றது. 1997 இல் இலங்கை விஜயம் ஞாபகார்த்தமாக முத்திரை வெளியீடும் செய்தது. இந்நிறுவனமானது சமூகப்பணிகளுடன் கல்விப்பணியையும் மேற்கொண்டது. 1930 ஆம் ஆண்டு முதல் தரம் மூன்று தொடக்கம் தரம் 11 வரையிலான வகுப்பு மாணவர்களுக்கு அகில இலங்கை சைவ சமய பாடப் பரீட்சையை சபை நடாத்தி வருவதோடு. சான்றிதழ்களும் வழங்கி வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்த சபையின் பணிகள், பின் வந்த சைவ சமய நிறுவனங்களுக்கு முன்மாதிரியாக அமைவதோடு சைவசமய வளர்ச்சிக்கும் வழிவகுத்துவருகின்றது.

## இராமகிருஷ்ண மிஷன்

1897ஆம் ஆண்டு மே மாதம் 1ம் திகதி சுவாமி விவேகானந்தரால் 'கல்கத்தாவை' தலைமைக் காரியாலயமாகக் கொண்டு அமைக்கப்பட்டது. இது உலகளாவிய ரீதியல் 160 கிளைகளுடன் இயங்கும் பெரிய சங்கமாகும். இந்நிறுவனமானது சமயப்பணிகளாக, பஜனைகளை நடத்தல், மத நல்லிணக்கம், துறவிகளுக்கு பயிற்சி அளித்து அவர்களை இராமகிருஷ்ண மிஷன் பணியில் ஈடுபடுத்தல், தியான வகுப்புக்களை மேற்கொள்ளல், ஸ்ரீ ராமகிருஷ்ண ஜெயந்தி, சாரதா ஜெயந்தி, விவேகானந்தர் ஜெயந்தி என்பவற்றை கொண்டாடுதல் போன்றவற்றை செய்வதுடன், கல்விப் பணிகளாக வேதாந்த பாடசாலை நிறுவுதல், சமஸ்கிருத பாடசாலை நிறுவுதல், ஞாயிறு பாடசாலை நடாத்துதல், சஞ்சிகைகள், நூல்கள் வெளியிடுதல் போன்ற பணிகளையும் செய்கின்றது. அநாதைகளுக்குப் புகலிடம் அளித்தலும், கல்வி கற்கும் வாய்ப்பை வழங்குதல், விதவைகளுக்கு உதவியளித்தல், ஹரிசனங்களை உயர்வுக்கு கொண்டு வரல் போன்ற சங்கப் பணிகளையும் செய்து வருகின்றது.

## அகில இலங்கை இந்து மாமன்றம்

1955 ஜனவரி 6ஆம் திகதி சைவப் பெரியோர்கள் கூடி இம்மன்றத்தை நிறுவினர். இந்நிறுவனமானது, இந்து தர்ம அறிவினையும், இந்து கலாச்சாரத்தையும், கல்வியையும் விருத்தி செய்யும் நோக்குடன் செயற்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது. இவற்றின் பணிகளாவன, நாடளாவிய ரீதியில் அறநெறிக்கு கருத்தரங்குகளையும், சமயதீட்சை கொடுக்கும் நிகழ்ச்சிகளையும் நடாத்தல், இரத்மலானை, கொழும்பு இந்துக்கல்லூரி விடுதிகளை அமைத்து சிறப்புற நிர்வகித்தல், சிவதொண்டர் அறநெறிப் பட்டறையை நடாத்தல், ஸ்ரீ விபுலானந்தர் முதியோர் இல்லம் அமைத்து நிர்வகித்தல் என்பனவாகும். இதனை போன்றே, மேலும் பல சைவ நிறுவனங்கள் இன்று சைவப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

தி.தேவபாரதி

தரம் 13


வர்த்தகப்பிரிவு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரங்களில் காணப்படும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள்



சைவத்தின் இருகண்கள் என விளங்குவன பன்னிருதிருமுறைகளும், மெய்கண்ட சாஸ்திரநூல்களுமாகும். சாஸ்திரநூல்கள் தலைவனையும், தன்னையும், உலகையும் பற்றி அறிய வேண்டிய விடயங்களை வரையறுத்துக் கூறும், தோத்திரங்கள் சாத்திரங்களால் துணைப்பட்ட தலைவனை நன்கறிந்து அவன் பால் பக்தி உண்டாகச் செய்யும். இரு கண்களும் அவன் பால் உண்டாக்கச் செய்யும் பக்தி ஒன்றையே நோக்கும். முக்கியமான திருமுறைகளான முதல் ஏழு திருமுறைகளிலும் அடங்குபவை தேவாரங்கள் என அழைக்கப்படும். இவை பல்லவராட்சிக் காலத்திலும், சோழர் காலத்திலும் இருந்த நாயன்மார்களால் பாடப்பட்டன என்பர். இத்தேவாரங்கள் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்ற மூவரும் பாடியருளினார்கள். இவ் மூவரும் தேவாரப் பதிகங்களிலும் சைவ சித்தாந்தக் கருத்துக்களான பதியியல்பு, பதியை அடையும் நெறி, இறைவனது இலட்சணவகை, திருநீற்றின் மகிமை, திருவைந்தெழுத்தின் மகிமை, கடவுட்கோட்பாடு, ஆணவம் பற்றிய கருத்துக்களையும், நல்வினைப் பயன்கள், போன்ற பல்வேறு சைவ சித்தாந்தக் கருத்துக்களையும் காணக் கூடியதாக உள்ளன. இவற்றை மூவருடைய தேவாரங்களையும் ஆராய்வதன் மூலம் பார்ப்போம்.

தேவாரம் பாடிய நாயன்மார்கள் முதல் பெரியபுராணம் பாடிய சேக்கிழார் பெருமான் வரை பாடியருளிய பாடல்களில் உள்ள கடவுள் பற்றிய கருத்துக்களே பின்பு சைவ சித்தாந்த சாஸ்திர நூல்களுக்கு கருவூலமாக அமைந்தன எனலாம். இவர்கள் இறைவன் ஒருவன் உள்ளான் அவனே சிவன். அவனை அறிந்து வழிபட்டு, அவனேடு இரண்டறக் கலந்து அத்து வித முத்தி பெற்றுப் பேரின்பம் அனுபவிப்பதற்காக உயிர்கள் எண்ணி இருக்கின்றன. அவ்வுயிர்கள் இறைவனை அறியாவண்ணம் இருக்கின்றன. இவற்றினை நீக்குவதற்கு மனமொழி மெய்களால் வழிபட்டு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் படிகளில் முறை தவறாமல் நின்று ஒழுகுவதால் இறைவனே உயிர்களுக்கு அத்து வித முத்தி தந்து அருளுவார் என்ற சைவ சித்தாந்தக் கூற்றுக்கு எடுத்துக் காட்டாக அப்பர் சுவாமிகள் சரியை நெறியிலும், சம்பந்த சுவாமிகள் கிரியை நெறியிலும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் யோக நெறியிலும், மாணிக்கவாசக சுவாமிகள் ஞான நெறியிலும் வாழ்ந்து காட்டி முத்தியடைந்தார்கள். என்பதைக் கொண்டு பின்வந்த சாஸ்திர நூல்கள், நால்வகை நெறிகளையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்புறுத்துவதைக் கொண்டு நாம் திருமுறைகளில் இருந்த சைவ சித்தாந்தக் கருத்துக்களையே பின்வந்த சாஸ்திர நூல்கள் பின்பற்றின எனலாம்.

சமய குரவர்களில் முதல்வராகிய திருஞானசம்பந்தர் இறைவனது உருவத் திருமேனியை 'தோடுடைய செவியன் விடையேறியோன் தூவெண்மதி சூடி காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளங்கவர் கள்வன்........' என்று பாடுகின்றார். மேலும் இறைவன் தனது வாம பாகத்தில் உமையை உடையவன் என்பதை "வரை கெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த" என்று பாடுவதில் இருந்து அறியலாம்.. இறைவனுக்கமைந்த உருவத் திருமேனிகளுள் அழகியல் ரீதியாகவும் தத்துவார்த்த ரீதியாகவும் ஒப்பற்ற வடிவமாகவும் விளங்குவது நடராஜ வடிவம். இந் நடனத் திருமேனியை, குனித்த புருவமும் கொவ்வை செவ்வாயும் பனித்த சடையும் பவளம் போல் மேனியும்...... என்ற வரிகளில் காணலாம். நடராஜ வடிவங்கள் பெருமளவுக்கு உலோகங்களில் வார்ப்புச் சிலையாக வடிக்கப்பட்டுள்ளன.

இவ் வடிவம் சைவ சித்தாந்தத்தில் பதிக்குரிய ஐந்தொழில் தத்துவத்தையும் இறைவன், கடந்த நிலையில் உலகெங்கும் வியாபித்தும், சொரூப நிலையில் அனைத்தையும் கடந்து நிற்கும் நிலையையும் உணர்த்துவதாக உள்ளது. பதியின் சொரூப இலட்சணம் பற்றிய குறிப்புக்கள் பல தேவாரங்களில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இப்படியாக இந்நிறத்தான், இவ்வண்ணத்தான், இறைவன் என திருநாவுக்கரசு நாயனார் வியந்து நிற்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிக்குப் புலனாகாத வகையில் இறைவன் உயிர்களிடத்தே கலந்து நிற்கும் நிலையை "விறகிற் தீயினன் ……………" என்ற பாடலடிகள் விளக்குகின்றன அடுத்து சைவ சித்தாந்தத்தில் பதியினை அடைவதற்கு வழிகளாக சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு வழிகள் கூறப்பட்டுள்ளது. இதை அப்பர் சுவாமிகள் "தொண்டு பாடியும் தூமலர் தூவியும் இண்டை கட்டி இணையடி ஏத்தியும் ……………" என்று பாடியுள்ளார்.

திருஞானசம்பந்தர், அடியார்களின் துயரைப் போக்க பல, அற்புதங்கள் நிகழ்த்தினர். "வாசி தீரவே…………" என்றும் திருப்பதிகத்தால் படிக்காசு பெற்று அடியார்களுக்கு அன்னதானம் செய்தமை, மூவகை வழிபாடுகளில் ஒன்றான சங்கம வழிபாட்டை வற்புறுத்தப்படுகின்றது. "போக மார்த்த ……………" என்னும் திருப்பதிகத்தால் அனல் வாதம் செய்து சமணரை வென்றமையின் மூலம் புற மதத்தைக் கண்டித்தார், என்பதையும் திருவாலவாய் என்னும் மதுரையில் அரசு வீற்றிருந்த கூன் பாண்டியனுற்ற வெப்பு நோயை "மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு………" என்றும் திருப்பதிகம் பாடியருளி அரசனின் வெப்பு நோயை மாற்றி, திருநீற்றின் மகிமையை காட்டினார். மந்திரங்கள் எல்லாவற்றுக்கும் மேலான திருனவந்தெழுத்து எனும் ஸ்ரீ பஞ்சாட்சரத்தைப் போற்றிப் பாடியருளிய திருப்பதிகமும் தம்மை வாதம் செய்யுமாறு வலிந்தழைத்த சமணரோடு தாமும் வாதம் செய்வதற்கு திருவருள் இணைந்து "காட்டுமாவதுரித்துரி போர்த்து…." எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு "வேத நெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க" காரணமாக அமைந்தவை திருப்பாடல்களான தேவாரங்களே ஆகும். அவை அருளாளர்களின் அனுபவங்களாக விளங்கும் வாய்மொழிகளாகவும், மெய்ப் பொருளியல் கருத்துக்களை நேர் நிறுத்திக் காட்டும் அளவையியல் மெய்மை மொழிகளாகவும் விளங்குகின்றன. இவ்வாறான தேவாரங்களில் இருந்து சைவசித்தாந்தக் கருத்துக்கள் பல காணப்படுவதை அறிய முடிகின்றது. இவை மெய்கண்ட சாஸ்திரங்களின் தோற்றத்துக்கு பெருந்துணை புரிந்தன, என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

கே.தீபதர்ஷினி

கலைப்பிரிவு (12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் சைவப் பாரம்பரியம்

ஈழத்திலே சைவநெறி சிறந்து விளங்குகின்றது. இந்த உயர் நிலையின் பின்னணியாகச் செழுமையானதொரு பாரம்பரியம் ஒளிர்கின்றது. தொன்மையுந் தனித்துவமும் கொண்ட இந்த மரபு, சைவ உலகிலே முக்கிய இடம் பெறுகின்றது.

ஈழத்து, சைவ பாரம்பரியத்தின் தொன்மையைத் தொல் பொருளாய்வுகளும், வரலாற்றுச் சான்றுகளும், இலக்கிய ஆதாரங்களும் மெய்ப்பித்து நிற்கின்றன. மிகத் தொன்மையான காலத்திலேயே நாட்டின் நான்கு திசையிலும் விளங்கிய ஈஸ்வரங்களை அறிந்து போற்றுகின்றோம். இந்தப் புராண சிவத் தலங்களுள், நகுலேஸ்வரம் வடக்கிலும், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம் ஆகிய இரண்டும் மேற்கிலும், திருக்கோணேஸ்வரம் கிழக்கிலும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவற்றினை விட, வட மத்தியில் விளங்குவது தான்தோன்றீஸ்வரம். தென் கோடியிலே, தெய்வத்துறையில் சந்திரசேகரம் என்ற சிவஸ்தலம் இருந்தமை பற்றியும் அறிகின்றோம். இவற்றிலே திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகியன, தேவாரம் பாடிய சமயகுரவர்களின் அருட்பாடல்கள் பெற்ற திருத்தலங்களாகப் பெருமை பெறுவன.

இன்னும் வரலாற்று நூல்களிலும், கல்வெட்டு ஆதாரங்களிலும் காணப்படும் "மூத்த சிவ", "மஹா சிவ" போன்ற குறிப்புகளும் ஈழத்துச் சிவ வழிபாட்டின் தொன்மையையுஞ் சிறப்பினையுங் காட்டிநிற்கின்றன. கலாநிதி போல் பீரிஸ், சேர் வில்லியம் ஜோன்ஸ் போன்ற அறிஞர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுகளிலும், மேலும் பல உண்மைகளைத் தெரிந்து கொள்கின்றோம். எங்கள் மரபின் பெருமையினை அறிந்து கொள்கின்றோம்.

அன்பு நெறியாக வளர்ந்த எங்கள் சமயத்தினை அனைவரும் ஒரு மனமாக ஆதரித்தனர். தமிழரசர்களும், சிங்கள பௌத்த அரசர்களும், காலத்துக்குக் காலம் அமைத்த ஆலயங்களைப் பற்றியும் அவற்றிற்கு வழங்கிய ஆதரவினைப் பற்றியும் அறிந்து பெருமை கொள்கின்றோம். கோட்டையரசனின் தலைநகராகிய ஜயவர்த்தனப்புரக் கோட்டைக்கு வெளியே இருந்த ஓர் ஆலயத்தினைப் பற்றி 'ஸந்தேஸ' நூலாகிய 'ஸலலிஹினி ஸந்தேஸ' (பூவை விடுதூது) என்பதிலே பின்வருமாறு ஒரு குறிப்பு வருகின்றது.

'கரும் அகிலும் கர்ப்பூரமும் எழுப்பும் புகையால்
ஆசைந்தாடும் கொடிகளை நிரையாகக் கொண்ட
பெரு மேளங்களும் மணிகளும் எழும்பும்
ஓசை எதிரொலி செய்து நிற்க தமிழிலே
தேவாரங்களை மக்கள் பக்தியுடன் பாடுகின்ற
அழகிய ஈஸ்வரன் தேவாலயம்'

பிற்காலத்திலே போர்த்துக்கேயர் அழித்த கோயில்களிலே இதுவும் ஒன்றாக இருக்கலாம். அவர்களால் ஆலயங்களை மட்டுமே தரைமட்டமாக்க முடிந்தது. எங்கள் வாழ்வின் உயிர் நாடியாக, உள்ளுணர்வாக ஒன்றியிருந்த சமயநெறி மேலும் ஒளிவிட்டு பிரகாசித்தது. நாவலர் பெருமானும், மற்றும் பல ஞானியரும் தோன்றி சைவ சமூகத்திற்கு வழிகாட்டினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராதன ஆலயங்கள் மீண்டும் புத்துயிர் பெற்றன. கிராமங்கள் தோறும் மேலும் புதிய ஆலயங்கள் தோன்றின. இன்று வட கோடியிலுள்ள மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் தொடக்கம் தென்கோடியிலுள்ள கதிர்காமம் வரை, இலங்கை எங்கணும் பெரியதும், சிறியதுமாக விளங்கும் கோயில்களோ பல. இவையும் சிவன்கோயில், அம்மன் கோயில், பிள்ளையார் கோயில், முருகன் கோயில், பெருமாள் கோயில் எனப் பலவகையின.

இவ்வாறாக வகைப்படுத்தப்பட்ட போதும், 'யாதொரு தெய்வங் கண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்' என்ற உண்மையை ஈழநாடு நன்கு உணர்ந்திருக்கின்றது. தனித்தனி ஆலயங்கள் அமைக்கப்பட்டபோதிலும், அனைத்தையும் சிவப்பொருளாகவே காணும் சிவநெறி இங்கே ஆழமாக வேரூன்றியிருக்கின்றது. இது எங்கள் மரபின் தனித்துவம் எங்கள் மரபின் தனித்துவமாகக் குறிப்பிட வேண்டிய மற்றொரு அம்சம் புராண படனமாகும். ஆலயங்கள் தோறும் படித்துப் பயன் சொல்லப்படுகின்ற கந்தபுராணந் தந்த உணர்ச்சியின் சிறப்பினைப் பல சந்தர்ப்பங்களிற் போற்றுவார் நாவலர் பெருமான். அந்தக்கந்தபுராண உணர்ச்சியும், அறிவுமே எங்கள் சமய மரபினைக் காத்து வளர்த்து வளம்படுத்தின என்று கூடச் சொல்லாம். இதன் மூலம் சமய அறிவு மட்டுமன்றி எழுத வாசிக்கத் தெரியாத கிராம மக்கள் கூட ஓரளவு இலக்கிய, இலக்கண அறிவைப் பெற்றனர்.

இவ்வாறான ஒவ்வொரு ஊரின் மத்தியிலும் அமைந்திருக்கும் கோயிலே, அவ்வூரிலே சகல வாழ்வுக்கும் உயிர் நாடியாக விளங்கியதெனலாம். ஆன்மீக வாழ்வுக்கு மட்டுமன்றிச் சகலவித கலை வளர்ச்சிக்கும் கூட்டு வாழ்வு போன்ற சமுதாய விருத்திக்கும் கோயில்களே நிலைக்களனாக விளங்கி வந்திருக்கின்றன. ஊரில் எழும் பலவித பிணக்குகளைத் தீர்க்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்கள் பயன்பட்டன. ஊரிலுள்ள தெய்வ சந்நிதியிலே கற்பூரத்தின் மேலே கையை வைத்துச் சத்தியம் செய்வதன் மூலம் பல வழக்குகள் தீர்க்கப்பட்டன. கிராமப்புற தெய்வ சந்நிதிகள் மகிமை பெற்றன. கோயில்களிலே விழாத் தொடங்கிவிட்டால் ஊர் முழுவதுமே புனிதமாகிவிடும். விழாக்காலம் முடியும் வரை மக்கள் விரதம் அனுஸ்டிப்பதும் சைவ போசனத்தைக் கைக்கொள்வதும் வழக்கமாகும். பெரும்பாலான கோயில்களிலே 10 நாள் விழாவே நடைபெறுகின்றது. மாவிட்டபுரம், நல்லூர் ஆகிய முருகன் கோயில்களிலே 25 நாள் விழா நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இறுதி நாள் அன்று தீர்த்தத் திருவிழாவும் அதற்கு முதல்நாள் தேர்த்திருவிழாவும் நடைபெறுவது நீங்கள் அறிந்ததே. பெரும்பாலான கோயில்களிலே ஒரு தேரும், சுதுமலை அம்மன் கோயில், திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி கோயில் போன்ற கோவில்களிலே மூன்று தேர்களும், மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், திருக்கேதீஸ்வரம், கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரம் முதலிய கோயிலில் 5 தேர்களும் தேர்த் திருவிழாவில் வீதிவலம் வருகின்றன. மாத்தளை முத்து மாரியம்மன் கோயிகளிலும் 5 தேர்களும் உள்ளன. இங்கு நகரத்து வீதிகளிலேயே தேர் வலம் வருவதைக் குறிப்பிட வேண்டும்.

இவ்வாறான வருடாந்த விழாக்களைவிடச் சிவராத்திரி, நவராத்திரி முதலான விழாக்களும், விரதங்களும், யமசங்காரம், சூரசங்காரம் போன்றனவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. மலையகத்தில் தீபாவளித் தினத்திலே நரகாசுரவதமும் திருமால் வழிபாடும் முக்கிய இடம் பெறுகின்றன. பெரும்பாலான ஆலயங்களில் ஆகம நெறிப்படி பூசைகள் நடைபெறுகின்றன. அறிவும் ஆசாரமும் பக்தியும் நிரம்பிய அர்ச்சகர்கள் பலர் எங்கள் ஆலயங்களிற் கிரியைகளை நடத்துகின்றார்கள். கதிர்காமம், செல்வச்சந்நிதி, மண்டூர் ஆகிய ஆலயங்களில் அந்தணர் அல்லாதோர் மந்திரம் சொல்லாது வாயைத் துணியாற் கட்டிக் கொண்டு பூசை செய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கத்தினைக் காண்கின்றோம். இவ்வழக்கம் ஏனைய ஆலயங்களில் காண முடியாது ஆலயங்களிலே வளர்ந்த எங்கள் சமய மரபும், வாழ்க்கை நெறியும் கல்விச் சாலைகளுடன் பிரிக்க முடியாதவாறு இணைந்தன. குருவே வாசமாக இருந்து அறநெறி பயின்ற அன்றைய மரபின் வழியே திண்ணைப் பள்ளிகளும், அவற்றைத் தொடர்ந்து பள்ளிக் கூடங்களும் சமயக் கல்விக்கு முக்கிய இடம் தந்தன. கட்டாய சமயக் கல்வியின் அவசியத்தை உணர்ந்து நாவலர் பெருமானால் ஆரம்பிக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையின் வழியே சைவம் இளைய தலைமுறையினரின் சிந்தைகளிற், பிரகாசித்து. நாவலர் அவர்களின் பணி இந்தியா வரை பரந்தது. சிதம்பரம், வேதாரணியம் முதலான புண்ணிய திருத்தலங்களுக்கு சைவப்பெருமக்கள் வழிபாடியற்றிச் செல்லும் வழக்கமே நெடுங்காலமாக நிலவிவந்தது. நாவலர் அவர்களின் பயணமோ, தனி வழிபாட்டு யாத்திரையாக அமையாமல், வழிகாட்டும் யாத்திரையாகவும் அமைந்தது. அவர் எழுதிய சைவ வினாவிடைகள் முதலான நூல்களினாலும், பதிப்பித்த சைவத் தமிழ்நூல்களினாலும், சைவ சமுதாயம் புதிய உத்வேகமும் உணர்ச்சியும் பெற்றது. இவ்வாறான எங்கள் சைவ மரபின் தனித்துவமான பண்புகள் பல, இவை முழுச் சைவ உலகின் எழுச்சிக்கும் வழி கோலின. நாவலர் வழியிலே காசிவாசி செந்திநாதையர் போன்றோரின் பணிகள் தொடர்ந்தன. எங்கள் கலைஞானம் வளர்ந்தது. சிவநெறி தழைத்தோங்கியது. ‘சிவ பூமி’ என்று அன்று திருமூலராற் சிறப்பிக்கப்பெற்ற எங்கள் நாடு என்றும் குன்றாத வாழ்க்கை நெறியாக, சைவ மரபினைப் பேணி நிற்கின்றது. ஒப்பற்ற ஒரு கலாசாரத்தினைப் பேணி நிற்கும் பெருமையிலே நாமெல்லாம் பூரிப்படைகின்றோம்.

தி.இந்துமதி

12 (கலைப்பிரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தட்சணாமூர்த்தி மூர்த்தம்



இறைவனைப் பல நிலைகளில் வைத்து வணங்குஞ் சிறப்பு வாய்ந்தது சைவம். அவன் தந்தையும், தாயும் ஆவான் ஒப்பரிய மாமனும், மாமியாகவும் விளங்குபவன். அவன் குருவாகவும் திகழ்கின்றான். சச்சிதானந்தனான அவன், ஞான வடிவினனாய் நின்று அறிவு பரப்பும் குருவாக விளங்குவதை எடுத்துக் காட்டுவது அவன் மூர்த்தி பேதங்களிலொன்றான். தட்சணாமூர்த்தியின் திருவுருவம். இது கருவறையின் தெற்குப் பக்கத்தே வெளிச்சுவரில் தெற்கு முகமாக பார்த்த வெளிச்சுவரில் தெற்கு முகமாக விளங்கும் படி நிறுவப்பட்டு இருப்பதை கருவறையை அடுத்துள்ள உட்பிரகாரத்தால் வலம் வரும்பொழுது காணலாம். தட்சாணமூர்த்தி வீற்றிருக்கும் நிலை அவர் குருவாய் விளங்குவதை நாமே அறிந்து கொள்ளும் வண்ணஞ்சுட்டுகின்றது. இவர் அறிவுறுத்துவது பல்வகை நுண்ணறிவு. இவ்வறிவு தான் அறுபத்து நான்கு கலைகளாக விரித்துள்ளது. இவற்றில் சிறப்பாகக் குறிப்பிட்டுக் கூற வேண்டியது யோகம், சங்கீதம் என்னும் இரு பெருங்கலைகள் யோக நெறி நின்றும், சங்கீத சாதனையால் நாதோபாசனை மேற்கொண்டும் இறைவனுடன் சாலோகாதி உயர் நிலை பெற்றவர்கள் பலர் என்பது நாமறிந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைகளைப் பயிலுந் தொடக்க நிலையில் இம்மூர்த்தியை உபாசிப்பர். யோகம் புகட்டுபவராயும், வீணை மீட்டும் நுண்கலை பயிற்றுபவராயும், ஞானம் பிறப்பிப்பவராகவும், சாத்திரங்களை அறிவுறுத்துபவராகவும் இம்மூர்த்தி சித்தரிக்கப்படுவர். இக்காரணம் பற்றியே இம்மூர்த்தியின் நான்கு பெரும் பேதங்களைக் காண்கின்றோம். யோக தட்சணாமூர்த்தி, வீணாதட்சணாமூர்த்தி, ஞான தட்சணாமூர்த்தி, வியாக்கியான தட்சணாமூர்த்தி என்பவையே இப்பேதங்கள். இறுதியிற் கூறப்படும் வியாக்கியான தட்சணாமூர்த்தி கோவில்களில் பெரும்பாலும் நிறுவப்பட்டிருக்கக் காண்கின்றோம். சில விஷ்ணு கோவில்களில் கூட தட்சணாமூர்த்தி மூர்த்தம் இடம் பெறுவதுண்டு.

தட்சணாமூர்த்தியில் பலவகைப்பட்ட உருவங்கள் மேல்வரும் இலக்கணங்களுக்கமைய அமைக்கபெறும். வியாக்கியான தட்சணாமூர்த்தி இமயமலையில் கல்லால மரத்தின் கீழ்புலித்தோலால் மூடப்பட்ட இருக்கையின் மீது அமர்ந்த பாவனையில் தோற்றம் பெறுவர். இவரைப் பத்மாசனத்தில் வீற்றிருப்பதாகச் சித்தரிப்பது உண்டு. வலது கால் கீழே தொங்கும் இடது கால் மடிந்து வலது தொடையின் மீது பொருந்தும் வண்ணம் வைக்கப்படும். இவ்வாசனத்திற்கு வீராசனம் என்று பெயர். கீழே தொங்கும் கால் "அபஸ்மாரபுருஷனின் உடம்பை மிதிந்தவாறு இருக்கும். இவ்வாறில்லாது சாதாரணமாகத் தொங்கியவாறு இருத்தலும் உண்டு. மூன்று கண்களும், நான்கு கைகளும் இவ்வுருவத்தின் அம்சங்கள்.

முன் உள்ள வலக்கை ஞான முத்திரையைக் காட்டி நிற்கும். இம் முத்திரைக்கு சின் முத்திரை என்று பெயரும் உண்டு. சந்தர்சன (சம்தம்ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திரை என்னும் இன்னொரு பெயரையுஞ் சில நூல்கள் வழங்குகின்றன. இடது பக்கத்தில் உள்ள முன்கை வரதகரமாய் இருக்கும் அல்லது தண்டஹஸ்தமாக நீட்டித் தொங்க விட்டவாறு அமையும் இவ்வாறாயின் தொங்குக் கரத்தின் முழங்கை முழந்தாளில் பொருந்த வேண்டும். வரத ஹஸ்தமும் அவ்வாறே முழந்தாளில் பதியும். இவ்விரு கைகளினது பின் பக்கங்களே முழந்தாளைத் தொடுவன. பின் பக்கத்தில் உள்ள வலது கை அக்'மாலையையும், இடது கை அக்கினியையோ அன்றிச் சர்ப்பத்தையோ தாங்கி நிற்கும். உடல் வளைவு சிறிது மின்றியிருக்கும். உடல் நேரே நிமிர்ந்து இருப்பது அவசியம். குருவாய் எழுந்தருளும் இம் மூர்த்தி பெருஞ் சக்தியை குறிப்பதாகவும், ஆழ்ந்த கருத்துகளை செறிந்த அறிவுரை நல்கும் நல்லாசிரியரின் நேரான நிலையைக் காட்டுவதாயும், இதன் அமைப்பு விளங்கும். தலையில் சடை பல கோலங்களிலே புனையப் பெற்றிருக்கும். இது சடாபத்தமாகவோ, சடாபாரமாகவோ, சடாமண்டலமாகவோ சடாமகுடமாகவோ அமையலாம்.

சடையில் ஊமத்தம்பூ விளங்கும். தலையின் மீது இடதுபக்கத்தில் பாம்பு. சிறுமணி முதலியன இடம்பெறும். வலது பக்கத்தில் அமைவன கபாலமும் பிறையும் தலை நடுவில் கங்கை தோற்றமளிப்பாள். இம்மூர்த்திக்கு உரிய நிறம் பளிங்கு நிறமாகும். முகத்திற் சலனக்குறி சிறிதும் தென்படுதல் கூடாது. கண்கள் மூக்கு நுனியிற் பதிந்தவாறு பார்வை அமைதல் வேண்டும். தர்ம உபதேசஞ் செய்யும் மூர்த்தி அநுக்கிரகம் பெரிதும் வழங்கும் சிறப்பியல்பினது எனக்கருதப்படுகிறது. இக்குரு மூர்த்தியைச் சுற்றிலும் சாத்திரங்களை ஓதி அவாவிச் சூழ்ந்து நிற்கும் இருீகள் இடம்பெறுவர். இவர்கள் நாரதர், ஜமதக்கினி வசிட்டர், பிருகு, பரத்வாசகர்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனகர், அகத்தியர் ஆகியோர்கள் சிவனுடைய நிலை ஒரே **தன்மை எனினும்** வலது பின் கையில் அக்கினி மாலையும், இடது பின் கையில் உற்பலமும் உண்டு. முன் வலக்கை ஞான முத்திரை, முன் இடதுகை அபயகரமானது தண்டகரமாகவாவது அமையலாம். யோகதட்சணாமூர்த்தி மூன்று வகையாக உருவாக்கப்படும். இருகரங்களையும் மடித்து ஸ்வஸ்காசனமாக இம்மூர்த்தி இருத்தல் வேண்டும். முன் வலக்கை மார்புக்குக் கிட்ட யோகமுத்திரை பிடிக்க, முன் இடக்கை மடியில் யோகநிலையில் வைக்கப்படும். பின் வலக்கையில் அக்கமாலை விளங்கும். மூர்த்தியின் பார்வை மூக்கு நுனியிற் பொருந்தும். சடைகள் தோள்களில் புரளும், இருள்கள் சூழ்ந்து அமைந்திருப்பர்.

யோகதட்சணாமூர்த்தியின் இரண்டாவது நிலை பின்வருமாறு, இடதுகால் உற்குடிகாசனமாய் அமைதல் வேண்டும். உடம்பும் இடதுகாலும் யோகபட்டதால் பிணிக்கப்படல்வேண்டும். வலது கால் தொங்கியவாறு இருக்கும், முன் இடக்கை நீண்டு தொங்கும். முழங்கை வளைந்து விளங்கும். முழுங்காலும் பொருந்தும். இம்மூர்த்தியின் ஏனைய அம்சங்கள் யோக தட்சணாமூர்த்தியின் முதல் வகையின் நிலையிற் காணப்படுவன போன்றவையே. இரு கால்களும் முற்றிலும், மாறுபட்டும் அமைய, வீற்றிருக்கும் நிலை இம்மூர்த்தியின் மூன்றாவது நிலை. இருக்கால்களையும் உடலைச் சுற்றி வளைத்துப்பணிப்பது யோகப்பட்டம் இது கால்களைக் கீழே தாழ்ந்து விடாதவாறு நிற்கவைப்பதற்குத் துணையாக இருப்பது. முன் முழங்கைகள் இரண்டும் நீண்ட முழங்காலில் பொருந்திக் தொங்கும். பின் வலக்கையில் அக்கமாலை. பின் இடக்கை ஏந்தி நிற்பது கமண்டலத்தையும், சடையும் சுடையில் தரிக்கப்படும் பிறையும் அழகுற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கும். சிவபெருமானைச் சங்கீத சாத்திரத்தின் குருவாகக் கொள்வார்கள். இவர் புகட்டும் அறிவு, கீதம், வீணை முதலியவற்றின் அறிவே எனவே இவரை வீணை மூர்த்தியாக வழிப்படுகின்றனர்.

முன் இருகரங்கள் வீணையைத் தாங்கும், ஏனைய அம்சங்கள் வியாக்கியான தட்சணாமூர்த்தியினது அம்சங்களே வீணையின் மேற்பகுதி இடது கையிற் பொருந்த கீழ்ப்பகுதி வலது கையிற் பொருந்தும் இம்மூர்த்தியின் நிலை. வீணயின் ஒலி பிறக்கும் பகுதி வலது தொடையிற் பொருந்த, கீழ், வலது கையால் வீணா மீட்டும் நிலையிலும் இம்மூர்த்தியை அமைக்கலாம்.

**எஸ்.கேதீஸ்வரி**

**தரம் 12 கலைப்பிரிவு**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியர்களின் ஆன்மீகச் சிந்தனைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாக் கண்டத்தின் மதங்களும் வழிபாட்டு முறைகளும்.

உலகில் இன்று வாழ்ந்த கொண்டிருக்கும் மதங்களின் பிறப்பிடம் ஆசியாக் கண்டமாகும். **கிறிஸ்தவம், இஸ்லாம், இந்து, பௌத்தம், சமணம், சீக்கியம், யூதம், கொன்பியூனிசம், ஷான்வோயிசம், நாவோயிசம், பஹாயிசம், ஸோறொஸ்றியனிசம்** ஆகிய மதங்களின் பிறப்பிடம் ஆசியாக் கண்டமே.

மத்திய கிழக்கு நாடுகளில் வாழ்ந்த சுமேரியர்கள், பபிலோனியர்கள், ஆசிரியர்கள், கானான்கள், ஹீயுறூக்கள், பாரசீகத்தவர்கள், அரேபியர்கள் ஆகிய அனைவரும் ஆதியில் தத்தமது காலச்சாரங்களுக்கு அமைவான மத அனுட்டானங்களைப் பின்பற்றினர். பின் வந்த யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம் மதங்கள் அப்பிரதேசத்தில் நிலவிய ஏனைய புராதன மதங்களை மழுங்கடித்துவிட்டது.

இப் பிரதேசங்களில் நிர்வாகம், மதம், இலக்கியம், மொழி, கலை அமைப்பதில் சுமேரிய வழக்கில் இருந்துள்ளது. இஸ்லாம் மத வருகையின் பின் அரபு மொழி இப்பிரதேசங்களில் ஆதிக்கம் செலுத்தியது. யூதர்கள் வாழும் இஸ்ரேல் நாட்டில் மட்டும் ஹீபுறூ மொழி பிரயோகத்திலுள்ளது.

யூப்பிறதீஸ், தைகிறீஸ் நதிகளுக்கிடைப்பட்ட செழிப்பு மிக்க பிரதேசமே மொசப்பற்றேனியா ஆகும். தொழில்னுட்ப துறையில் பல விடயங்களை முதல் முதலில் கண்டறிந்த பெருமையும் மொசப்பத்தேனியா மக்களைச் சேரும். உலகில் முதல் நாகரீகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமேரியாவில்தான் தோன்றியதாகவும் அதனால் அப்பிரதேசத்தை நாகரீகத்தின் தொட்டில் (Candle of civilization) எனக் கூறுவர். சுமேரியர்களால் பாய்மரக் கப்பல், வள்ளங்கள், எழுத்து வரிவடிவம், கண்ணாடி, வெண்கலம், சக்கரம், வட்டத்தை முதல் முதலில் 360 பாகையாகப் பிரித்தமை, வானசாஸ்திரம், எண்கணிதம், போன்ற கண்டு பிடிப்புக்களுக்கு காரண கார்த்தாவாக இருந்துள்ளனர்.

சுமேரியர் மனிதர்களுக்கு ஏற்படுகின்ற நோய் துன்பங்களுக்கு தெய்வங்கள், ஆவிகள், பிசாசுகளே காரணமென நம்பினர். ஒவ்வொரு உறுப்புக்கும் ஏற்படும் நோய்க்கு அவ்வவ் உறுப்புக்கு காரணமான தெய்வமே காரணமென கூறுவர். நோய்களின் குணங்குறிகளை ஆராய்ந்தறிந்து அவற்றை தணிப்பதற்கு தாவர மூலிகை மருத்துகளை நோயாளர்களுக்கு வழங்குவதுடன் குறிப்பிட்ட தெய்வத்திற்கு படையல்கள் படைத்து வணக்கம் செலுத்துவர். மந்திர உச்சாடனம் செய்தும், வழிபாடுகள் செய்தும் நோயின் காரண கார்த்தாவான கடவுளர் யாரென அறிந்து கொண்ட பின்னர்தான் பச்சிலை மூலிகை மருந்துகள் கொடுப்பதுண்டு.

மத்திய தரைக் கடலின் கிழக்குப் பகுதியில் மலைகளால் சூழப்பட்ட **'லெவன்ற்' (Levant)** என்ற பிரதேசத்தில் மக்கள் கூட்டமொன்று குடியேறியது. அங்கு வாழ்ந்த மக்களைக் **'கானானைற்'** என்றழைத்தனர். கானானைற் மக்கள் அத்திலாந்திக் சமுத்திரத்தின் பெரும்பகுதியில் கப்பலோட்டியுள்ளனர். புராதன காலத்தில் உலகில் வாழ்ந்த சகல மக்களிலும் பார்க்க சிறந்த கடலோடிகளாக விளங்கியுள்ளனர். இவர்கள் **'எல்'** என்ற தெய்வத்தை வணங்கினர். அவரை கொம்புகளுடைய எருது அல்லது கொம்புகள் பொருந்திய தலைக்கவசம் அணிந்த மனித உருவமாகச் சித்தரித்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானானைற்கள் வணங்கிய இன்னொரு தெய்வம் வளப்பமும், மழை, நீர், தானியங்களுக்கு அதிபதியான **'டகோன்'** என்ற தெய்வாகும். தானியக் கதிர்களைத் தலை முடிக்குப் பதிலாகத் தலையில் தாங்கியவராகவும் இடுப்புக்கு கீழே மீன் உருவம் கொண்டவராகவும் அவரை சித்தரித்துள்ளனர்.

பாரசீகம் (ஈரான்) எனக் குறிப்பிடப்படும் பேர்சியப்பீட பூமி மக்கள் பேர்சிய மொழி பேசி வந்தனர். இஸ்லாம் மதம் எழுச்சியடைந்தவுடன் இப்பிரதேச மக்களிடையே அரபு, குர்டிஸ், துருக்கி, ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகள் பேசப்படுகின்றன. பல போர்களை கண்ட பாரசீக பீடபூமி தனது பல இலக்கிய பொக்கிசங்களை இழந்து விட்டது. இவர்களது பிரபல்யமடைந்த **'ஆயிரத்தொரு இரவுகள்' 'அலாவுதீனும் அற்புத விளக்கும்' 'மாலுமி சிந்துபாத்தின்** ஏழு கடல் பயணங்கள்' போன்றன பாரசீக இலக்கியத்திற்கு சான்றாகும். பெரும்பாலான மக்கள் இஸ்லாம் மதத்தை தழுவியிருந்தாலும் ஒரு சில ஆதி மதங்கள் ஈரானில் அருமையாகவும், ஈரானுக்கு வெளியே பரவலாகவும் விளங்கி வருகின்றன. **'ஸொரொஸ்ற்றியன்' 'கிறிஸ்தவம்' 'பஹறய் நம்பிக்கை'** போன்ற மதங்கள் வழக்கிலுள்ளன.

இந்திய உபகண்டத்தில் புராதன காலத்திலிருந்து இந்து மதம் கைக்கொள்ளப்பட்டு வந்துள்ளது. ஐரோப்பாவிலிருந்து புறப்பட்ட ஆரிய வம்சத்தினர் (ரஷ்யாவிலுள்ள அரான் என்ற கடற்கரைப் பிரதேசத்திலிருந்து வந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது) பாரசீகத்தை முதலில் ஆக்கிரமித்து பின்னர் மேற்கு நோக்கியும் கிழக்கு நோக்கியும் நகர்ந்து முதலில் சிந்து நதிப் பிரதேசத்தில் குடியேறி பின்னர் இந்தியாவின் பல பாகங்களிலும் குடியேறியுள்ளனர். உலகின் பல்வேறு பகுதிகளில் நிலவியிருந்த ஆதி மதங்களெல்லாம் வழக்கொழிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயுள்ள இன்றைய கால கட்டத்தில் இந்தியாவில் தோன்றிய புராதன மதமான இந்து மதம் மட்டும் இன்றும் சிறப்பான முறையில் கைக்கொள்ளப்பட்டு வருவதென்பது பெருமைக்குரிய விடயமாகும். ஆரியர்கள் ப' மித்தாய், **சிவன், இலிங்கம்** போன்ற தெய்வங்களையும் இயற்கை அம்சங்களையும் மூதாதையர்களையும் வணங்கினர். பின்னர் **கணபதி, முருகன், பகவதி, பிரம்மா, விஷ்னு, கண்ணன், அனுமான்** போன்ற தெய்வங்களையும் வணங்கினர். வேதங்கள், சங்கிதைகள், பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், தோத்திர இதிகாசங்கள் போன்றன எழுதப்பட்டன.

பழம்பெரும் நாகரீகம் நிலவிய நாடுகளில் சீனாவும் ஒன்று. பெரும்பாலான மக்களால் மண்டறின் மொழி பேசப்படுகின்றது. அதற்கு அடுத்தபடியாக **'கண் ரொனிஸ்'** மொழி பேசப்படுகிறது பாரம்பரிய மதங்களான **கொன்பியு'சியம், ராவோசியம், பௌத்தம்** போன்ற மதங்கள் பின்பற்றப்படுகின்றன. இம்மக்களாலேயே சித்திர எழுத்து கண்டுபிடிக்கப்பட்டது. பட்டு, பீங்கான், வெடி மருந்து, தேயிலை, கடதாசி, நாணயத்தாள் அச்சிடும் கருவி என்பன சீனர்களாலேயே கண்டு பிடிக்கப்பட்டது. மேலும் அபாக்கஸ் கணக்கிடும் கருவியையும் சீனர்களே கண்டு பிடித்தனர். கொன்பியு'சியஸ், ராவோசியம் தோன்றுவதற்கு முன்னர் சீனர் பல்லாயிர கடவுளர்களை வணங்கியுள்ளனர். தமது மூதாதையர், இயற்கையியன் சக்திகள், குறிப்பாக சூரிய, சந்திரர், அக்கினி, வாயு, ஜலம் போன்றன இடம் பெற்றுள்ளன. சீனர்கள் கடவுளர் சிலரை வணங்குவதில்லை உ+ம் இடி முழக்கக் கடவுள், அதே போல் தமக்கு வேண்டியவற்றை வழங்கத் தவறும் கடவுளரை தண்டிக்கும் நடைமுறையும் உண்டு. ஜேட் மன்னர்களால் நியமிக்கப்பட்ட யாளி மன்னர்கள் கடலுக்கடியில் வசித்து வருவதாகவும் அவர்களே மழையைக் கொடுப்பதாகவும் நம்பும் இவர்கள் கடும் வறட்சி தோன்றும் போது யாளி மன்னர் கோவில் சென்று காணிக்கை, நிவேதனங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கி வழிபடுவர். அப்படி வழிபாடு செய்து 40 நாட்களுக்குள் மழை பெய்யத் தவறும் பட்சத்தில் யாளி மன்னர்களின் சிலைகளை பாதை நடுவில் வெயிலில் வைப்பர். வெப்ப தாங்காமல் மழையை பெய்விப்பார்கள் என்ற நம்பிக்கையே இதற்கு காரணமாகும்.

ஐப்பானில் இயற்கை வளங்கள் குறைவாகக் காணப்படுகின்ற போதிலும் பொருளாதார வளர்ச்சி, கல்வி ஆகியவற்றில் முன்னணியில் உள்ளது. தாய் மொழிக்கும் நாட்டிற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கும் ஐப்பானியம் புதிய தொழில்நுட்பம் சார்ந்த வேற்று மொழி நூல்கள் யாவும் உடனடியாகவே ஐப்பான் மொழி பெயர்க்கப்படுகிறது. இவர்கள் இயற்கை சக்தியையே அதிகம் வணங்கியுள்ளனர். சூரிய தேவதையை பெண்ணாக வழிபட்டனர். தமது தேசிய கொடியில் சூரியனை தேசிய சின்னமாகப் படைத்துள்ளனர். **'இஸனாகி'** என்பவரே ஐப்பான் தேசத்தை படைத்தவர் என நம்பினர். அவருக்கும் **'இசனாமி'** என்ற தேவதைக்கும் **'அமற்றெராசு' 'சுஸானோவா' 'சுகியோமி – நோ - மிகோடோ'** என்ற 3 கடவுளர் பிறந்தனர். ஐப்பானில் தற்போது **'ஷின்ரோயிசம்' 'ஸென் பௌத்தம்'** ஆகிய மதங்கள் பின்பற்றப்படுகிறது.

இவ்வாறு ஆசியக் கண்டத்தில் இன்று வாழும் மதங்களின் தோற்றம் உள்ள பூமி என்ற பெருமையைக் கொண்டுள்ளதோடு பல்வேறு மதங்கள் கொண்டுள்ள தத்துவக்கொள்கைகள் மனிதனை செம்மைப்படுத்தவே உருவாக்கப்பட்டுள்ளன என்பதும் உண்மையே. மனிதன் மனிதனாக வாழ்வதற்கும் தவறும் பட்சத்தில் நரக லோகத்தில் ஏற்படும் இன்னல்களையும் மதங்கள் கூறுகின்றன.

**ஆதாரம் : உலக மதங்கள் - சி.வ. இரத்தினசிங்கம்**

**செல்வி Y. ஆலாலசுந்தரம். (ஆசிரியர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் உணர்த்தும் இறை சிந்தனை

சங்கமருவிய காலத்தில் தோற்றம் பெற்ற அறநூல்களில் திருக்குறள் முதன்மையானது. தெய்வப்புலவர் திருவள்ளுவரால் அருளிச் செய்யப்பட்ட இந்நூல் இன மத பேதங்களைக் கடந்து பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமையினூடாக இதன் தனித்துவத்தை அறிந்து கொள்ளலாம்.

**"உள்ளத்திலே ஒளி உண்டானால் வாக்கினிலே ஒளி உண்டாகும்"** என்ற வாக்கிற்கமைய வள்ளுவர் உள்ளத்தில் உண்டான ஒளி உலகெங்கும் உத்தரவேதமாக தமிழ்மறையாக இன்று இருளை அகற்றுகின்றது.

**திருவள்ளுவமாலையும்**

**" ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி**
**வேதப் பொருளாய் மிக விளங்கித் - தீதற்றோ**
**ருள்ளதோ றுள்ளுதோ றுள்ள முருக்குமே**
**வள்ளுவ வாய்மொழி மாண்பு"** என

திருக்குறளின் வாய்மொழி மாண்பை விளக்கி நிற்கின்றது.

நால்வகைப் புருடார்த்தங்களினுள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றினையும் அறத்துப்பால், பொருட்பால் காமத்துப்பால் என வகுத்து நான்காவதாகிய **'வீடு'** பெறும் வழியினை தனியாகக் கூறாமல் விட்டாலும் குறள் கூறும் வழி செல்வோனுக்கு **'வீடு'** என்பது தானாகவே வந்துசேரும் என்பது கண்கூடு அதாவது மணிகளினூடு செல்லும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழை போல் விலை மதிப்பற்ற மணியாக விளங்கும் ஒவ்வொரு குறளும் வீடு பேறுவதற்கு இட்டுச்செல்லும் சக்தி கொண்டனவாகையால் திருக்குறள் ஒரு தெய்வ நூலாக போற்றப்படுகின்றது. கம்பரும் **"தொல்லுலகில் எழுதுண்ட மறையன்றோர்"** என்று திருக்குறளை **"மறை"** எனப் போற்றுகின்றார். அணுவிற்கு அணுவாயும் பெரிதிற் பெரிதாயும் விளங்கும் இறைவன் பண்பினையும் அவ் இறைவனை அடைதலே பிறவியெடுக்கும் உயிரின் இலட்சியம் என்பதையும் **"கடவுள் வாழ்த்து"** என்னும் அதிகாரத்தினுள் உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

அறத்துப்பாலில் முதல் அதிகாரம் கடவுள் வாழ்த்து அதில் முதல் குறள்

**" அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு"**

என்பதாகும் இக் குறளிலே இறை உண்மை வெள்ளிடை மலையாக தெளிவுறுத்தப்படுகின்றது.

இங்கு **"அ"** என்ற எழுத்து எழுத்துக்கட்கெல்லாம் முதலாய் அமைவது போல உலகிற்கு முதலாய் இறைவன் இருக்கின்றான் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது. காணும் உலகைக் கொண்டு காணுதற்கரிய இறையுண்மை இங்கு புலப்படுத்தப்படுகின்றது.

சைவ சித்தாந்த தத்துவமும் இக் காட்சிப் பிரமாணத்தினையே தனது பதிக்கோட்பாட்டில் முன்வைக்கின்றது. இதிலிருந்து ஏறத்தாள இரண்டாயிரம் ஆண்டு முற்பட்டது சைவ தத்துவம் என அறியலாம். **"அ"** என்னும் ஒலி முதல்முதலாகவும், அட்சரங்களில் கலந்தும் கரந்தும் இருப்பது போல இறைவன் எங்கும் நிறைந்து காணப்படுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் கற்கும் கல்வியினது பயன் கடவுளை வணங்குதல் ஆகும். கல்வியிற் சிறந்தவர்கள் கடவுளை மனதில் நினையாவிடின் அக்கல்வியில் எவ்வித பயனுமில்லை என்று இரண்டாவது குறளினூடாக கடவுளை வணங்குதலின் முக்கியத்துவத்தை அழகுற எடுத்துக்கூறுகின்றார்.

அன்பர் அகத்தில் வீற்றிருக்கும் கடவுள் அடியைச் சேர்ந்தவர் பேரின்ப உலகில் எப்பொழுதும் வாழ்வார் என்பதனை மூன்றாவது குறளினூடாக முன்வைக்கும் திருவள்ளுவர், வித்தைக்கு அதிபதியான இறைவன் விருப்பு வெறுப்பு இல்லாதவர் என்பதை **"வேண்டுதல் வேண்டாமையிலான்"** எனக் கூறும் அடிகளினூடாக அழகுறக் கூறுகின்றார்.

நற்றாள், மாணடி என்னும் சொற்களினூடாக இறைவனது பாதங்களின் சிறப்பு எடுத்தியம்பப்படுகின்றது. இச் சிறப்பிற்குரிய பாதங்கள் வணக்கத்துக்கு உரியவை எனப் பொருள்படுகின்றது.

அதுமட்டுமன்றி, **"பொறிவாயில் ஐந்தவித்தான், "எண்குணத்தான்"** என்னும் பதங்கள் இறைவனது பண்புகளை விளக்குவனவாக காணப்படுகின்றன. நான்காவது குறள் தொடக்கம் பத்தாவது வரை பிறவி நீக்குவதற்கான வழிகள் கூறப்படுகின்றன.

விருப்பு வெறுப்புக்கள் அற்ற நிலையே துன்ப நீக்கத்திற்கு வழியாகும். "ஓடும் பொன்னும் ஒப்பமதித்த அப்பர் பெருமானினது நிலையே இங்கு விடுதலைக்கு வழி என உணர்த்தப்படுகின்றது. **"யாண்டும் இடும்பை இல"** என்ற அடி இம்மை மறுமைத் துன்பங்கள் இல்லை என்பதையே சுட்டுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**" பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கம்**
**நெறிநின்றார் நீடுவாழ்வார்" என்னும்**

குறளினூடாக அழிவின்றி வாழ்பவர் யாவர் என்பதைக் கூறுகின்றார் திருவள்ளுவர்.

ஐம்பொறி வேட்கைகளுமில்லாக் கடவுளது நிலையான நல்லொழுக்கில் ஒழுகினவர்கள் எக்காலமும் அழிவின்றி வாழ்வார். இந் நீண்ட வாழ்வினைப் பெற நல்வினை தீவினை ஆகிய இருவினைகளும் நீங்க வேண்டும். இவ் இருவினைகளும் நீக்க என்ன வழி என்பதை திருவள்ளுவர்.

**"இருள் சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு"**

என்னும்

குறளினூடாக தெளிவுபடுத்துகின்றார். நிலைத்த புகழுக்குரியவன் இறைவன் ஒருவரே அத்தகைய இறைபுகழைப் பேசுபவர்கள் பிறவித்தளை நீங்கிடப்பெறுவர்.

மேலும் ஒப்பு உயர்வு இல்லாத கடவுள் அடியைச் சேர்ந்தவர்களே மனக் கவலையிலிருந்து நீங்குவர் என்று கூறி பிறப்பு என்பது துன்பத்திற்குரியது. இப் பிறவிக்கடல் பொருளின்பங்களுக்கு உட்பட்டது. இச் சிற்றின்பங்களை அறக்கடலாகிய கடவுள் அடியைச் சேர்ந்தவர்களே வென்றெடுத்து வாழ முடியும். இதனை **"அறவாழி" அந்தணன்...-"** எனத் தொடங்கும் குறளினூடாக அறியலாம்.

இறுதி இரு குறளினூடாகவும் இறைவனது இயல்புகள் அழகுறக் கூறப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்குணங்களை உடையவன் கடவுள். கடவுளை வணங்காதவனுடைய உடலுறுப்புகள் இருந்தும் பயனில்லாதவை என்கிறார். இதனை வலியுறுத்த பின் வந்த நாயன்மார்களும் இறைவன் மீது பக்தி செலுத்த உடல் உறுப்புக்களை பயன்படுத்தி பதிகங்கள் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. திருநாவுக்கரசரது **"தலையே நீ வணங்காய் ......-", "கண்காள் காண்மின்களோ.......", "வாயே வாழ்த்து கண்டாய்..."** என்பன சிறந்த உதமாரணங்களாகும்.

இறுதிக் குறளிலே கடவுள் அடியைச் சேர்ந்தாலன்றி ஒருவன் பிறவிப் பெருங்கடலைக் கடக்க முடியாது என்பதை வள்ளுவர் தன் வாய் மொழியிலே தெளிவுற விளக்குகிறார்.

**"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்"**

எனவே மனிதப்பிறவியின் நோக்கம் பிறவியாகிய பெருங்கடலை இறை நம்பிக்கையுடன் கடந்து வாழல் என்பதாகும். இறைவனைச் சேரலே வீடு அல்லது மோட்சம் எனப்படும். இதற்குத்தடையாய் இருக்கும் பிறப்பினை நீக்க இறைவன் பாதங்களை நாட வேண்டும். இதனையே வள்ளுவர் வாய்மொழி எடுத்தியம்புகின்றது. இவ்வாறு **"வான்மறை" எனவும் "வள்ளுவர் வான்சுடர்"** எனவும் சிறப்புப்பெற்ற திருக்குறள் மனித மனங்களில் என்றும் தெய்வநூலாக விளங்குவதைக் காணலாம். வள்ளுவரை வாயார வாழ்த்தி, திருக்குறளை தினமும் ஓதி, செம்மையான வாழ்வு வாழ்வோமாக.

**உசாத்துணை நூல்கள்**


❖ திருக்குறள் - பரிமேலழகர் உரை.



**திருமதி. திலீபா தனேந்திரன்**

**ஆசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயமும் கணிதமும்

இந்து சமயத்துடன் கணிதத்திற்குள்ள தொடர்பு மிகவும் தொன்மையானது வேதங்களில் கணிதம் முக்கிய பகுதியாக விளங்குகின்றது.

வர்க்கம், கனம், வர்க்கமூலம், கனமூலம் என்பன 'நாரத விஷ்ணுபுராணம்' எனும் நூலிலே விளக்கப்பட்டஉள்ளதுடன், அவை, தொடர்பான கணிதச் செய்கைகளும், இடம்பெற்றுள்ளன. வேதங்களிலும், சாஸ்திரங்களிலும் கணிதத்திற்கு சிறப்பான இடம் வழங்கப்படுள்ளது. இன்றும் பஞ்சாங்கம், எண்கணித பஞ்சாங்கம், வாக்கிய பஞ்சாங்கம் என்ற பிரதான இருமுறைகளில் பின்பற்றப்படுகின்றது. இவற்றின் மூலம் கிரகங்களின் நிலைகள் மற்றும், சந்திர, சூரிய கிரகணங்கள் போன்றவை சரியாக கணிக்கப்படுகின்றன.

இந்திய கணித வரலாற்றில் பிரம்பகுப்தா, கோவிந்த சுவாமி, ஆரியபட்டா, பாஸ்கரா, பரமேஸ்வரா, நாராணன் போன்ற இந்து கணித வியலாளர்கள் உயரிய பங்களிப்பை வழங்கியுள்ளார்கள். ஆரிய பட்டா எனும் இந்து கணிதவியலாளரே கணிதத்தில் பூஜ்ஜியம் என்னும் எண்ணக்கருவை முதன்முதலாக முன்வைத்தவராவர். பூஜ்ஜியத்தின் கண்டுபிடிப்பு கணிதத்துறையில் மாபெரும் மாற்றத்திற்கு காரணமாயிற்று.

இலகுவான பெருக்கல் முறைகள் வேதத்தில் கூறப்பட்டுள்ளன.

**ஈரிலக்க எண்ணை ஈரிலக்க எண்ணால் பெருக்குதல்**

உதாரணமாக 4 2

X 3 4

---

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் பெருக்கலை எவ்வாறு ஒரேவரியில் செய்து முடிப்பது என்று பார்ப்போம்.

படி 1
4 2
3 4
8

வலப்பக்கத்தில் இருந்து ஆரம்பித்து நிலைக்குத்தாக பெருக்கவும். $2 X 4 = 8$ விடையின் இறுதி இலக்கம் பெறப்படும்.

இலக்கங்களை குறுக்காக பெருக்கி அவற்றைக் கூட்டவும்.

படி II
4 2
3 4
2 8

$3 X 2 + 4 X 4 = 6 + 16 = 22$

2 ஐ எழுதி 2 ஐ அடுத்த இலக்கத்துக்கு கொண்டு செல்லவும்

படி III
4 2
↓
3 4
1 4 2 8

இறுதியாக நிலைக்குத்தாக அடுத்த எண்களை பெருக்கவும். $4 X 3 = 12$

எனவே இறுதி இலக்ககள் $12 + 2 = 14$

$42 X 34 = 1458$ என பெறப்படுகிறது.

100 இற்குக் கிட்டிய இரு எண்களின் பெருக்கம் (இங்கு 100 ஆனது அடிப்படை எண் ஆகும்)

$96 X 92 = 8832$ இதனை செய்தவற்கான இலகுவான படிமுறைகள் பின்வருமாறு

படி I
96 4
92 8
| 88 | |

(100 இலிருந்து 96 ஆனது 4 குறைவாகவும்

(100 இலிருந்து 92 ஆனது 8 குறைவாகவும் உள்ளன. அவற்றை ஒவ்வொரு எண்ணுக்கும் வலப்பக்கமாக எழுதவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96 இருந்து 8 ஐ கழிக்க (அல்லது 92 இலிருந்து 8 ஐக் கழிக்க) குறுக்காக கழிக்கவும். விடையின் முதல் பகுதி பெறப்படும்.

```
96   4
   ↕
92   8
----------
88 | 32 |
```

நிலைக்குத்தாக, பெருக்கவும் விடையின் இறுதிப் பகுதி பெறப்படும்.

## மூன்று இலக்க எண்ணை மூன்று இலக்கத்தால் பெருக்குதல்.

உ + ம்

```
    3  5  2
X   2  3  4
-----------
-----------
```

இறுதியாகவுள்ள இரு எண்களை

படி I

```
    3  5  2
X   2  3  4
-----------
         |8|
-----------
```

நிலைக்குத்தாகப் பெருக்கவும் கடைசி இலக்கம் பெறப்படும்.

கடைசி இரு இலக்கங்களையும்

படி II

```
    3  5  2
X   2  3  4
-----------
     | 6| 8
-----------
```

குறுக்காக பெருக்கிக் கூட்டவும் கடைசியிலிருந்து 2 ஆம் இலக்கம் பெறப்படும்.

$2 X 3 + 5 X 4 = 6 + 20 = 26$

(2)

1ம், 3ம் இலக்கங்களை

படி III

```
    3  5  2
X   2  3  4
-----------
  |3| 6  8
-----------
```

குறுக்காகவும் நடு உறுப்புக்களை நிலைக்குத்தாகவும் பெருக்கி கூட்டவும்.

$3 X 4 + 2 X 2 + 5 X 3 = 12 + 4 + 15 = 31 + 2 = 33$

3ஐ எழுதி மற்றைய 3ஐ அடுத்த இடப்பெறுமானத்திற்குக் கொண்டு செல்லவும். முதல் இரு எண்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3)

படி IV

```
    3   5   2
      ╳
X   2   3   4
-------------
  2 3   6   8
-------------
```

குறுக்கப் பெருக்கி கூட்டவும்

5x2 + 3x3 = 10 +9 = 19 + 3 = 22

(2)

படி V

```
          3   5   2
          ↕
X         2   3   4
---------------------
விடை  8   2   3   6   8
---------------------
```

முதல் இரு எண்களையும் நிலைக்குத்தாக பெருக்கவும்

3x2 = 6+2

100, 1000, 1000 போன்ற எண்களிலிருந்து அவற்றிலும் குறைவான என்னைக் **கழித்தல்.**

உதாரணம் :

```
   1   0   0
 -     7   8
-------------

-------------
```

முதல் இலக்கங்களை / இலக்கத்தை 9 இலிருந்து கழிக்கவும். கடைசி இலக்கத்தை மட்டும் 10 இலிருந்து கழிக்கவும் விடை இலகுவாகப் பெறப்படும்.

9 – 7 = 2

10 – 8 = 2

விடை : **22**

உதாரணம் : 10000 – 7932 = ?

9 – 7 = 2

9 – 9 = 0

9 – 3 = 6

10 – 2 = 8

விடை : **2086**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைதகரஸ் போன்ற கணித வியலாளர்கள் தோன்றுவதற்கு முன்பே இந்து கணித வியலாளர்கள் பல கணித வாய்ப்பாடுகளையும், தேற்றங்களையும் உருவாக்கியதுடன் இந்திய இந்து கணித வியலாளர்கள் கணிதத்தில் சிறந்து விளங்கினர். ஆரியப்பட்டா என்ற கணிதவியலாளர் முடிவில் தசமங்கள் தொடர்பான எண்ணக்கருக்களை முன்வைத்தமையானது சந்திர கிரணம் தொடர்பான விளக்கங்களுக்கும், சந்திரனின் இயக்கம் தொடர்பாக அறிந்து கொள்ளவும் பெரும் துணையாகவிருந்தது.

இவ்வாறு இன்னும் நூற்றுக்கணக்கான இந்து கணித வியலாளர்கள் மூலம் கணிதத்திற்கும் இந்து சமயத்திற்குமுள்ள தொடர்பை அறியக்கூடியதாகவுள்ளது, எனவே இந்து சமயமானது கணிதவியலின் வளர்ச்சிக்கும், அதன் மூலம் விஞ்ஞானம் வளர்வதற்கும் பெரும் காரணியாக அமைந்துள்ளது, என்பது நாம் எல்லோரும் பெருமைப்பட வேண்டிய உண்மையாகும்.

**திரு. R. முரளிதரன்**

**ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப் புறப்பாடல்களில் காணப்படும் பண்கள்

சாதாரண மக்களது ஆசாபாசங்கள் இன்ப, துன்பங்கள், எழுச்சி, வீழ்ச்சிகள், ஆரவாரங்கள், அவதிகள், ஏக்கம், எக்காளம், வேதனை, விரக்தி, மருட்சி, மகிழ்ச்சி ஆகிய பலப்பல உணர்ச்சிகளைச் சிந்தனைக்கு சுவைக்கச் சுவைக்க மகிழ்ச்சியூட்டும் பாடல்கள் தான் நாட்டுப்புறப் பாடல்கள் மனித சுகத்திற்கு விடுதலையும், விடிவும் ஏற்படவேண்டும் என்று துடித்த கிராமப் புறத்தவர்கள். இலக்கண வரம்பையும் மீறி வரையறைக்கும் அப்பாற்பட்டு அமைத்த வடிவமாகவும் எளிமையும் இனிமையும் நிறைந்த உயிரோட்டமும் கற்பனை வளமும், கவர்ச்சியும் பொருந்திய உணர்ச்சி கொப்பளங்களாகவும் வெடித்த இசை கலந்த பாடல்கள் தான் நாட்டுப்புறப் பாடல்கள்.

ஐரோப்பாவில், நாட்டுப்புற இசையைப் பயன்படுத்தி மேல்நாட்டு இசையை வளப்படுத்தியுள்ளனர். ஈழத்து நாட்டுப்புறப் பாடல்களும் தமிழக நாட்டுப்புறப் பாடல்களும் ஒன்றை ஒன்று மிஞ்சி நிற்பதோடு இத்தகைய நாட்டுப்புறப் பாடல்களில் இருந்தே பல இராகங்களும் தோன்றின புன்னகவராளி, சிந்து பைரவி, நாத நாமக்கிரியா, ஆனந்தபைரவி, நிலாம்பரி போன்றவற்றை இங்கு குறிப்பிடலாம்.

❖ மேலும் திருமுறைப்பாடல்களில் காணப்படும் பல பண்கள் நாட்டுப்புறப் பாடல்கள் இசையில் காணப்படுகின்றன. ஆனந்தக் களிப்பு என அழைக்கப்பெறும் ஒருவகை நாட்டுப்புறப் சீராமரப் பண்ணில் அமைந்துள்ளது. அப்பாடல் 'நந்தவனத்திலோர் ஆண்டி' என வரும் பாடலாகும். இவ்வகைப்பாடல் மிகவும் பழமையானவை. மேலும் கோபாலகிருஸ்ண பாரதியார் இயற்றிய 'கானாமலட இருக்கலாகாது'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாடலும், தியாகராசா சுவாமிகள் இயற்றிய 'கருணாஜலதே' என்ற பாடலும் 'சீர்வளர் பசு தோகை மயிலான்' என்று தொடங்கும் காவடிச் சிந்துப் பாடலும், தேவாரத்தில் இப் பண்ணமைந்த பாடல் 'எம்பிரான்' எனத் தொடங்கும் சம்பந்தர் பாடலாகும்.

பண் செவ்வழியில் தாயுமானவர் சுவாமிகள் இயற்றிய 'பராபரக் கண்ணிப் பாடல்கள் அமைந்துள்ளன. தேவாரத்தில் இப்பண்ணில் அமைந்த பாடலாகிய 'தொண்டர் அஞ்சுகளிலும் என வரும் பாடலை சம்பந்தர் பாடியுள்ளார். சுவாதி திருநாள் மகாராஜா உற்சவ பிரபந்தங்களைப் மங்களகரமாக இப்பண்ணிலையே பாடியுள்ளார். சுந்தர மூர்த்திநாயனார் பாடிய 'மீளா அடிமை' என்ற தேவாரப் பாடலின் பண்ணாகிய செந்துருத்தி தமிழ்நாட்டில் நலங்கு பாடல்கள் பாடுவதற்கும் திருமண வைபவங்களிலும் பாடப்படுகின்றன.

நாட்டார் பாடலில் தொன்று தொட்டுப்பாடிவரும் தாலாட்டுபாடல் மேகராகக் குறிஞ்சி என்னும் பண்ணிலேயே பாடப்படுகின்றது. இப்பண்ணிலே சம்பந்தர் 'புலன் ஐந்தும்' எனும் தேவாரப் பாடலையும் பாடியுள்ளார்.

'மந்திரமாவது' என்னும் சம்பந்தர் தேவாரமும் தமிழ்நாட்டில் வழங்கும் வழிநடைச் சிந்துபாடல்களில் அமைந்துள்ளது. பண் வியாழக்குறிஞ்சியை தியாகராஜசுவாமிகள் தனது இசைநாடக நூலான "பிரகலாத பக்தி விஜயத்தில்" தொடக்கதிலும் இறுதியிலும் பாடியுள்ளார்.

இவ்வாறே தேவாரப்பண்களுள் பல, நாட்டுபுறப்பாடல்களின் இசையில் காணப்படுகின்றன மேலும் பல பண்களில் இருந்தே, இராகங்கள் உருவானதாகவும் கூறப்படுகின்றது.

திருமதி ஆர். இரத்தினவேல்
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம் பெயர்ந்த நாடுகளில் இந்துமதம்

மக்கள் ஏதோ ஒரு காரணத்தால் தாங்கள் வாழ்ந்த தாய் நாட்டை விட்டு, வேறு நாட்டுக்குச் சென்று நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ வாழும் நாடுகள் புலம்பெயர்ந்த நாடுகளாகும். புலம் பெயர்ந்த நாடுகளை

1. மேற்குலக நாடுகள்
2. கிழக்குலக நாடுகள்

என இருவகைக்குள் அடக்கலாம்.

மேற்குல நாடுகளில் இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா, ஜேர்மனி, 'வாய் தீவுகள், அமெரிக்கா, நியு'யோர்க், நோர்வே, சுவீடன், இத்தாலி முதலிய நாடுகளையும், கிழக்குத் தேசநாடுகளில் அவுஸ்ரோலியா, நியு'சிலாந்து, சிங்கப்பு'ர் முதலான நாடுகளையும் குறிப்பிடலாம்.

ஆரம்ப காலங்களில் பல்வேறு காரணங்களுக்காக மக்கள் புலம் பெயர்ந்து வாழ்ந்துள்ளனர். போர், திருமணம், வர்த்தகம், தொழில்வாய்ப்பு என்பன காரணங்களாக அமைந்துள்ளன. இந்துக்கள் குடியேறிய நாடுகளில் தங்கள் பண்பாட்டை நிலை நிறுத்திக் கொள்வதற்காக பல்வேறு நிறுவனங்களை நிறுவி அதன் மூலம் இந்து சமயத்தை வளர்க்க முற்பட்டனர். வளர்த்தும் வருகின்றனர். அவ்வகையில் ஆலயங்கள், மன்றங்கள், சபைகள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இனி மேற்குலக நாடுகளில் இந்து சமயமானது எவ்வாறு வளர்ந்துள்ளது என்பதைப் பார்ப்போம். 1893 ஆம் ஆண்டில் சிக்காக்கோ நகரில் நடைபெற்ற உலக மத மகாநாட்டில் சுவாமி விவேகானந்தர் கலந்து கொண்டு பின்னர் 1895 இல் இல்ண்டனில் அவரால் ஆற்றப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான யோக பிரசங்களைத் தொடர்ந்து மேற்குலக மக்களின் மனங்களில் இருந்து சமயம் பற்றிய விளக்கம் ஒன்று ஏற்பட்டது. பல மேற்குலகத்தைய கல்வியாளர்கள் இந்து சமயம் பற்றிய விளக்கத்துக்கு புத்துயிர் கொடுத்தனர்.

1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்த பொதுநலவாய நாடுகளில் இருந்து, இந்தியர்களும் தமிழ் பேசும் மக்களும் மேற்கு நாடுகளுக்குச் சென்றதை அடுத்து இந்து வழிபாட்டுத் தலங்கள் மேற்கில் உள்ள பரந்த மனப்பாங்குடைய அரசுகளினால், பல்லின மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் மேற்குல நாடுகளில் இன்று பல இந்துக் கோயில்கள் கட்டப்பட்டு கிரியை மரபுகள், மற்றும் உற்சவங்கள் என்பன மிகச் சிறப்பாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

1970 வரை இலண்டனில் இந்து ஆலயம் எதுவும் இருந்ததில்லை. மதம் தொடர்பான விடயங்கள் தனியார் இல்லங்களில் இடம் பெற்றன. இலண்டன் விடுதிகளில் இந்தியப் பாணியில் திருமணங்கள் இடம்பெற்றது.

இன்று இலண்டனில் பழமையான கிறிஸ்தவ தேவாலயங்கள் சில, அங்கு வந்து வழிபாடுவார் அருகியமையாலும் பேணவருவாய் போதாமையாலும் விற்பனை செய்யும் நிலைக்கு வந்துவிட்டன. முதன் முதலில் லண்டனில் ஆச்வே (Archway) எனும் இடத்தில் முருகன் ஆலயம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. ஆகமவிதிக்கமைவாக அமைக்கப்பட்டு நல்லூர் கந்தசுவாமி கோயிலின் கொடியேற்ற மகோற்சவ காலத்தில் இங்கும் 25 நாட்கள் மகோற்சவம் நிகழ்வது குறிப்பிடத்தக்கது. இது உயர் குன்று முருகன் என அழைக்கப்படுகின்றது. இன்று இலண்டனில் 16 இந்துக் கோயில்கள் உருவாக்கப்பட்டு வழிபாடுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் பெறுகிறது. இவற்றைவிட இலண்டன் சைவ முன்னேற்ற சங்கம், இலண்டன் சிவயோகம் இந்து அறக்கட்டளை, இலண்டன் திருக்கோயில் ஒன்றியம் என இந்துசமயத்தை வளர்ப்பதிலும், சைவத் தமிழ்ர் பண்பாட்டை பேணுவதிலும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர், அங்கு வாழும் மக்கள்.

கனடாவில் ரொறண்டோ மாநிலத்தில் 5 இந்துக் கோயில்களும், மொன்றியலில் மூன்று இந்துக் கோயில்களும், வன்கூவரில் இரண்டு இந்துக் கோயில்களும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவைதவிர கனடா இந்து சமயப் பேரவை, கனடா இந்து கலாசார மன்றம், கனடா தமிழ்க் கலாச்சார சங்கம், கனடா சைவசித்தாந்த மன்றம் போன்ற பல மன்றங்கள் கனடாவில் சைவம், தமிழ் என்பவற்றை வளர்க்கும் பணிகளில் ஈடுபட்டு வவருகின்றன.

ஜேர்மனியில் வாழும் இந்துக்களால் பெரிய கணேசர் ஆலயம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இங்கு கூட்டு வழிபாடு கோயில் விழாக்கள் சிறப்பாக இடம்பெறுகின்றன. இதுபோல பிரான்ஸ், சுவிஸ்லாந்து போன்ற நாடுகளிலும் புலம் பெயர் மக்களால் ஆலயங்கள் அமைக்கப்பட்டு வழிபாடுகள் இடம் பெறுகின்றன. இவ்வாலயங்களில் இசை, நடன வகுப்புக்கள் சமய வகுப்புக்கள், நற்சிந்தனைகள், கூட்டு வாழிபாடுகள், விழாக்கள் என்பன சிறப்பாக நடைபெறுகின்றன.

அமெரிக்காவில் ஏறக்குறைய நூற்றுக்கு மேற்பட்ட கோயில்கள் உள்ளன. வட இந்தியர் அதிகமாக வாழும் பகுதிகளில் விஷ்ணுவுக்கும், சிவனுக்கும் கோயில்கள் உள்ளன. அமெரிக்காவில் உள்ள கோயில்கள் 70 விகிதம் மின் கணித்துறையில் பிர்சித்தமான ஸ்தாபனங்கள் உள்ள கலிபோர்ணியா, நியூயோக், சிலினொயில், ஒசையோ ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்களில் உள்ளன. இங்குதான் இந்தியாவில் இருந்து வந்த அனேக மின் கணித்துறைப் பொறியியலாளர்கள் வேலை செய்கின்றார்கள். அத்துடன் வியாபாரம், மருத்துவம், கல்வித்துறைகளிலும் பலர் முன்னேறி உள்ளனர். பண வசதி படைத்தவர்கள் மனநிம்மதிக்காகவும், பக்திக்காகவும், வரிச்சலுகைக்காகவும், தமது பிள்ளைகள் இந்துக் கலாச்சாரத்தைமறந்துவிடக் கூடாது என்பதற்காகவும், கோயில்களைக் கட்டினர். இங்கு வெங்கடேஸ்வரர் கோயிலும், இராஜராஜேஸ்வரி கோயிலும் மக்களிடையே பிரபல்யமான கோயில்களாகும். அமெரிக்காவில் முதன் முதலில் ஆகம விதிப்படியும், பல்லவ சிற்ப சாஸ்த்திரத்தின் படியும், கட்டப்பட்ட மஹாவல்லப கணபதி கோயில் நியூயோர்க்கில் உள்ளது.

இவ்வாறாக மேற்குலகநாடுகளான இலண்டன் கனடா, ஜேர்மனி, அமெரிக்கா போன்றவற்றில், இந்துக்கள் பல கோயில்களைக் கட்டியும், இந்து மன்றங்கள், சபைகள் என்பவற்றை நிறுவியும், இந்து சமூக மேம்பாட்டிற்குப் பணிபுரிந்து வருகின்றமை, கண்கூடு.

**திருமதி. கலைமகள் முரளீதரன்**

**ஆசிரியர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 2015 ஆம் ஆண்டிற்கான இந்து மன்ற செயற்பாடுகள்

- சித்திரைப் புதுவருட விழா கொண்டாடப்படடது.
- விநாயகர் சதுர்த்தி (ஆவணி) கொண்டாடப்பட்டது.
- இந்து கலாசார அமைச்சினால் நடாத்தப்பட்ட இந்து சமய பொது அறிவுப் போட்டிகளுக்காக மாணவர்ளை தயார்படுத்தி பங்கு பெறச் செய்தல்.
- கட்டுரை, பேச்சு, பண்ணிசை, மாலை கட்டுதல், கோலப் போட்டிகள் ஆகியவை நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.
- 2013 ஆம் ஆண்டு வாணி விழாவும் "அருள் ஒளி" சஞ்சிகை வெளியீடும் நடை பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாணி விழாப் போட்டியில் பரிசில் பெற்ற மாணவர்கள் - 2015

**தரம் 1, 2**

**பிள்ளையார் பிடித்தல்**

1ஆம் இடம் - சி. டினுஷன்

2ஆம் இடம் - எஸ். இந்துஜா

3ஆம் இடம் - ஜி. தனுஷிக்கா

**தரம் 3, 4**

**தோரணம் செய்தல்**

1ஆம் இடம் - பி.கலைக்குமார்

2ஆம் இடம் - எஸ்.டில்ஷினி

3ஆம் இடம் - எஸ்.தோமிலா

**பேச்சு**

1ஆம் இடம் - இந்துஜன்

2ஆம் இடம் - கே.லக்ஷிகா

3ஆம் இடம் - எஸ்.யுகாஷினி

**தரம் 5, 6**

**நிறைகுடம் வைத்தல் (குழு)**

1ஆம் இடம் - பி.பர்மினா

**கட்டுரை**

1ஆம் இடம் - வை.பிரவிஷான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரம் 7, 8**

**கோலம் போடுதல்**

1ஆம் இடம் - எஸ்.தினேஷ்

2ஆம் இடம் - ஐஸ்வரியா

3ஆம் இடம் - சௌமியா

**பண்ணிசை**

1ஆம் இடம் - எஸ்.கிரண்ராஜ்

2ஆம் இடம் - டீ.லினுசி

3ஆம் இடம் - ஜி.சதிஸ்ராஜ்

**தரம் 9, 10, 11**

**கோலம் போடுதல்**

1ஆம் இடம் - மதுமிதா

2ஆம் இடம் - பிரியதர்ஷினி

3ஆம் இடம் - திலிப்குமார்

**மாலைகட்டுதல்**

**பேச்சு**

1ஆம் இடம் - கே.கவிதாஞ்சலி

2ஆம் இடம் - ஏ.காயத்ரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரம் 12, 13**

**கட்டுரை**

1ஆம் இடம் - ரி.தேவபாரதி

**கோலம் போடுதல்**

1ஆம் இடம் - நிஷாந்தினி

2ஆம் இடம் - எஸ்.ஷர்மிளா

**மாலைகட்டுதல்**

1ஆம் இடம் - ஆர்.விராஜினி

**பேச்சு**

1ஆம் இடம் - கே.தீபதர்ஷினி

2ஆம் இடம் - எஸ்.கேதீஸ்வரி

**பண்ணிசை**

1ஆம் இடம் - எஸ்.ஷர்மிளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

# LADY
## *Fashion*

*Dealers in : Bridal Jewellery*
*Imitation Jewellery*
*Cosmetics & Stylish Fancy Items*
*etc.....*



**No.285/C, Galle Road**
**Wellawatta, Colombo - 06**
**(Opp.Wellawatta Police Station)**

**Tel : 94 11 2363975**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

UJ

# UDAYA
## Jewellers



No.303, Galle Road,
Wellawatta, Colombo - 06
Sri Lanka

Tel : 94 11 2554933



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

# ARRUJINA
## JEWELLERY

**Collection of Fine Genuine Jewellery**

අරුජිනා ජුවෙලරි

அருஜிணா ஜீவலரி





**No.36, Galle Road,**
**Dehiwala. Sri Lanka**

**Tel : 2716028, 4563499**
**Fax : 2733503**
**E-mail : arrujina@sol.lk**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

# OMEGAA PHARMACY

***Wholesale & Retail Dealers in Pharmaceuticals, Groceries & Baby Items***



No.344, Galle Road,
Wellawatte, Colombo - 06
Tel : 011 4889911
Tel / Fax : 011 4514156

No.20A, Galle Road,
Dehiwala
Tel : 011 2723803

E-mail : vijay77mega@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

# MIRACLE

## *FASHION JEWELS*

**DEALERS IN GUARANTEED GOLD FORM JEWELLERY, SILVER JEWELLERY, COSMETICS & PERFUME ETC**



**# 391A, Galle Road, Colombo -06**

**Tel: 011 - 2363761 / 077 9397500**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள் பலகோடி

- வாணி விழா நிகழ்வினை சிறந்த முறையில் நிகழ்த்துவதற்கு அருள் புரிந்த இறைவனுக்கு முதற் கண் நன்றி செலுத்துகின்றோம்.
- இவ்விழா நிகழ்வு சிறப்பாக அமைய பல வழிகளிலும் எமக்கு ஆதரவு தந்து வழிப்படுத்திய எமது வித்தியாலய அதிபர் திருமதி. ஜெயராணி தியாக ராஜா அவர்களுக்கும்,
- வாணி விழா நிகழ்வுகளை சிறப்பாக அமைய பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து ஆசிரியர்களுக்கும்.
- வாணி விழா சிறப்பு மலரின் 'அருள் ஒளி' வெளிவர விளம்பரங்களைத் தந்துதவிய பெருத் தகைகளுக்கும்,
- வாணி விழாப் போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை தந்துதவிய பெருந்தகைகளுக்கும்,
- மற்றும் இச் சஞ்சிகையை கணணி அச்சுப் பதித்த மாணவிகளுக்கும் மற்றும் எமக்கு உதவியளித்த இங்கு குறிப்பிடத்தவறிய அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும், எமது மன்றத்தின் சார்பில் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதில் அகமகிழ்வடைகின்றோம்.

**நன்றி**

**இந்து மன்றம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUMANGALI REST

## Van For Service

**Spacious A/C & Non A/C Rooms**
**With All facilities Provided**



**No. 06, Daya Road,**
**Wellawatte,**
**Colombo - 06**

**Tel : 0112504413**
**011 2504415**
**011 2504416**
**Fax : 011 2504071**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ROCK ENGINEERING (PVT) LTD

**Developers & Contractors**





## BLUE HILLS RESIDENCIES

**No.28, Frazer Avenue,**
**Dehiwala, Sri Lanka**

***Mobile : 077 3146050***
***Tel : 011 7220388***
***E-mail : ratthi1980@gmail.com***

Printed by :
K.J Enterprises, No.63, Vihara Lane, Colombo - 06. T.P : 0112058489

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org